விலை :20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
தமிழ் இலக்கிய
நயம் - I,II,III
உள்ளே...

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 13 திங்கட்கிழமை (28.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 345

# புத்துயிர்பெற்ற துயிலுமில்லங்கள்

## கல்லறைகள் இருந்த இடத்தில் கதறியழுத உறவுகள்





(யாழ்ப்பாணம்) (உ.சாளின்)

தமிழின விடுதலைக்காக இலட்சிய வேட்கையுடன் போராடி வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் வடக்கு - கிழக்கில் பெரும் உணர்வுபூர்வமாக இடம் பெற்றன.

மாவீரர் துயிலுமில்லங்களுக்கு பல ஆயிரக்கணக்கான மக்கள் சென்று தமது உறவுகள் விதைக்கப்பட்ட இடங்களில் தீபம் ஏற்றி மண்ணில் புரண்டு அழுதனர். இந் நினைவு நிகழ்வுகளால் வடக்கு - கிழக்கு ஏழு வருடங்களின் பின்னர் நேற்றையதினம் எழுச்சி பெற்றது. (24ஆம் பக்கம் பார்க்க)

# கல்லறைகள் இருந்த இடத்தில் கதறியழுத உறவுகள்





(யாழ்ப்பாணம்) (உ.சாளின்)

தமிழின விடுதலைக்காக இலட்சிய வேட்கையுடன் போராடி வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் வடக்கு - கிழக்கில் பெரும் உணர்வுபூர்வமாக இடம் பெற்றன.

மாவீரர் துயிலுமில்லங்களுக்கு பல ஆயிரக்கணக்கான மக்கள் சென்று தமது உறவுகள் விதைக்கப்பட்ட இடங்களில் தீபம் ஏற்றி மண்ணில் புரண்டு அழுதனர். இந் நினைவு நிகழ்வுகளால் வடக்கு - கிழக்கு ஏழு வருடங்களின் பின்னர் நேற்றையதினம் எழுச்சி பெற்றது. (24ஆம் பக்கம் பார்க்க)

## கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள் அஞ்சலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்று மாவீரர் நாள் நிகழ்வுகள் பெருமளவு மாவீரர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்கள் ஒன்று கூடி கண்ணீர் மல்க உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர்.

கடந்த 2007 ஆம் ஆண்டு இறுதியாக கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் நாள் நடத்தப்பட்டது.

அதன் பின்னர் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இப்பிரதேசங்கள் காணப்பட்ட போது தமிழ் மக்களின் பிரதேசங்களில் உள்ள அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களிலும் 23ஆம் பக்கம் பார்க்க....

## மாவீரர் நாள்; இராணுவம் கண்காணிப்பு



23ஆம் பக்கம் பார்க்க....

## விபத்தில் ஐவர் பலி!

(களுத்துறை)

களுத்துறை - வாதுவ - பொதுபிடிய பகுதியில் கார் ஒன்று ரயிலுடன் மோதியதில் ஐவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 24ஆம் பக்கம் பார்க்க....

## கோப்பாயிலும் சுடரேற்றி அஞ்சலி



24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்கு, யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களினால் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்திலுள்ள மாவீரர் நினைவிடத்திற்கு முன்பாக இந்த நினைவேந்தல் நிகழ்வுகள மாலை 6.05 ற்கு இடம்பெற்றுள்ளன.

மாவீரர் நினைவிடம் மஞ்சள் சிவப்பு கொடிகளினால் அலங்கரிக்கபபட்டு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அதேவேளை, மலர் தூவி நினைவுச் சுடர்கள் ஏற்பட்டன. இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழக வளாகம் மற்றும் 24ஆம் பக்கம் பார்க்க....

## வவுனியாவில் நினைவேந்தல்

(வவுனியா)


வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபைக்கு முன்பாக மாவீரர் நினைவு தின நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு வின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாவீரர் நினை 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழர் தாயகமெங்கும் மாவீரர் நாள் அனுஷ்டிப்பு


நல்லூரில்...



யாழ்.பல்கலையில்...



கிழக்கு பல்கலையில்...


அம்பாறையில்...


முல்லைத்தீவில்...




வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில்...




முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில்...




முல்லைத்தீவு நகர் கடற்கரையில்...

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் நாள் நேற்று தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு, புலம்பெயர் தேசங்களில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கில் நீண்ட காலத்திற்குப் பின்னர் மாவீரர் நாள் நிகழ்வுகள் இம்முறை இராணுவக் கெடுபிடிகள் அற்ற நிலையில் இடம்பெற்றன.

படங்கள் : சாளின், சோபிகா, மகாலிங்கம், நிபோஜிதன், சண்முகம் தவசிலன், கிஷோர், விஜயவாசன், வசந்தரூபன்.


சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில்...



தமிழின விடுதலைக்காக போராடி உயிர்நீத்த மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலி நிகழ்வு நேற்று காலை நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவு தூபி முன்றலில் இடம் பெற்றது. வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் மாவீரர் நாள் பதாதைகள் கட்டப்பட்டு மாவீரர்களுக்கு சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி நினைவு கூர்ந்ததுடன் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள்: உ.சாளின், பொ.சோபிகா)

# போர்க்குற்ற விசாரணை விடயத்தில் ஐ.நாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## பான் கீ மூனின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பான விசாரணை என்ற விடயத்தில் தமது கொள்கையில் மாற்றம் இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூனின் பிரதிப்பேச்சாளர் பர்ஹான் ஹக் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.**

பொறுப்புக்கூறல் விடயங்களில் தமக்கு அழுத்தங்கள் இல்லை என்று இலங்கை அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்த நிலையிலேயே பர்ஹான் ஹக்கின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

பான் கீ மூன் அடுத்த வருடம் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் இலங்கையின் விடயத்தில் கொள்கை மாற்றம் ஏற்படும் என்று சில தரப்புக்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

எனினும் அதனை பர்ஹான் ஹக் மறுத்துள்ளார். யார் வந்தாலும் இலங்கையின் விடயத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சித்திரவதைகள், வெள்ளை வான் கடத்தல் போன்ற சம்பவங்கள் கடந்த வருடத்திலும் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-7)

## மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கினால் பொலிஸ் திணைக்களம் ஒன்பது பிரிவுகளாகும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அச்சம்

(கொழும்பு)

உத்தேச அரசியல் யாப்பில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை வழங் கும் யோசனையை நடை முறைப்படுத்தினால், இலங்கை பொலிஸ் திணைக்களம் 9 பிரிவுகளாக பிரியும் ஆபத்து இருப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பு அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால், இரகசியப் பொலிஸ் பிரிவு, பயங்கரவாத ஒழிப்பு பிரிவு, தேசிய புலனாய்வுத் துறை, போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு என்பனவும் செய லிழந்து போகும் நிலைமை உருவாகும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

வட மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால், இரகசியப் பொலிஸாரும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவும், புலனாய்வுத் துறையும் பலாலி விமான நிலையத்துக்கு வெளியே சென்று விசாரணை முன்னெடுக்க முடியாத ஒரு நிலைமை தோன்றும்.

பொலிஸ் அதிகாரம் வடக் குக்கு வழங்கப்பட்டால், வடமாகாண முதலமைச்சரிடம் கேட்காமல் பொலிஸாருக்கு வட பகுதிக்கு செல்ல முடியாமல் போகும் எனவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள் ளது. (இ-7-10)

## காஸ்ட்ரோவின் வீர சாதனைகளை பாராட்டும் பிரதமர்

(கொழும்பு)

20 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவராக கியூபா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ விளங்குவதாகவும் அவரின் வீர சாதனைகளை பாராட்டுவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பிடல் காஸ்ட்ரோ அணி சேரா இயக்கத்தின் ஹீரோவாகவே கருதப்பட்டார்.

கியூபா நாட்டின் முன்னாள் ஜனாதிபதியின் சில கொள்கைகள் தொடர்பில் தங்களுக்கு உடன்பாடு இல்லை என்றாலும், அவருடைய அந்த தைரிய செயலுக்காக பாராட்டியே ஆக வேண்டும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும், அவரது சமூக கொள்கைகள், கல்வி மற்றும் வீட்டுவசதி துறைகளில் அவருடைய செயல் குறித்து கட்டாயம் பாராட்டவே வேண்டும் என ரணில் கூறியுள்ளார்.

அங்கோலா விடுதலை மற்றும் தென்னாபிரிக்கா விடுதலைப் போராட்டத்தில் பிடல் காஸ்ட்ரோவின் பங்களிப்பு குறித்து நினைவில் கொள்ள வேண்டும் என ரணில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தனது இரங்கல் செய்தியை அவரது உத்தியோகபூர்வ முகப்புத்தக கணக்கில் பதிவேற்றம்செய்துள்ளார். (இ-7)

## அரசைக் கவிழ்க்க சீனா செல்லவில்லை

### மகிந்த கூறுகிறார்

தனது சீனப் பயணம் தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக அல்ல என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டுமாயின் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்பட மாட்டேன் என மகிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டில் ஆட்சியை மாற்ற வேண்டுமாயின் பொது மக்களின் ஆதரவை திரட்டி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து மாற்றத்தை மேற்கொள்வேன் என மகிந்த இதன்போது தெரிவித்தார்.

சீன அரசாங்கம் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்காக மகிந்த சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.



சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே தான் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்த இரங்கல்

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரங்கல் வெளியிட்டுள்ளார். பிடல் காஸ்ட்ரோ (ஓகஸ்ட் 13 , 1926 - நவம்பர் 26, 2016) கியூபாவைச் சேர்ந்த பொதுவுடைமைப் புரட்சியாளரும் பொதுவுடைமை அரசியல்வாதியும் ஆவார். கியூபாவில் 1959 இல் புரட்சியை வழிநடத்தி புல்ஜென்சியோ பாட்டிஸ்டாவின் அரசை வீழ்த்தி தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்ற காஸ்ட்ரோ ,1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும், 1976 முதல் 2008 வரை ஜனாதிபதியாகவும் பொறுப்பு வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உள்ளூராட்சி மன்றங்களில் 25சதவீத பெண் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்படவேண்டும்

(கொழும்பு)

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மாத்திரமின்றி சகல துறைகளிலும் அவர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி மன்றங்களில் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எம்.என்.பிரனாந்துவின் 23 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள மகாவலி நிலையத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் அதிகளவான தொழில்வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. எனினும், தாம் பொறுப்பெடுக்கும் துறைகளில் அனைவரும் பிரகாசிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மலேசியாவில் கடத்தப்பட்ட 5 இலங்கையர்கள் மீட்பு

மலேசியாவில் கடந்த 8 மாதங்களாக ஆட்கடத்தலில் ஈடுபட்டு வந்த ஒரு குழுவினரால் கடத்தப்பட்டிருந்த ஐந்து இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

ஆங்கில ஊடகம் ஒன்று இந்த செய்தியினை வெளியிட்டுள்ளது. மலேசிய பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனைகளை அடுத்து குறித்த குழுவை சேர்ந்த 8 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் கடத்தப்பட்டவர்கள் மீட்கப்பட்டனர்.

இவ்வாறு கடத்தல்காரர்களிடம் இருந்து 30 இந்தியர்களும் மீட்கப்பட்டுள்ளதாக மலேசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இந்திய கடற்படைத் தளபதி இலங்கைக்கு திடீர் விஜயம்

இந்தியாவின் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா ஐந்து நாட்களுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இலங்கைக்கு வந்துள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான கடல்சார் உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்த விஜயம் அமைகிறது.

மேலும், ஜனாதிபதி மைத திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பாதுகாப்பு அதிகாரிகளின் தலைவர் மற்றும் முப்படை தலைவர்கள் ஆகியோரை இந்த விஜயத்தின் போது சந்திப்பார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெறவுள்ள "காலி உரையாடல்" மாநாட்டிலும் இந்தியாவின் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளின் கடற்படைகள் இடையே கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பிலான பிரச்சினைகள் குறித்து இடம்பெறும் வருடாந்த மாநாடே "காலி உரையாடல்" என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# சேற்றுக்குள் சிக்கிய இளைஞன் உயிரிழப்பு

## ஆழம் பார்க்க இறங்கியபோது விபரீதம்

(சாவகச்சேரி)

ஆழம் பார்ப்பதற்காக மதகுக்குள் இறங்கிய இளைஞன் ஒருவர் சேற்றுக்குள் சிக்கி பரிதாபகரமாக உயிரிழுந்தார்.

இச்சம்பவம்நேற்றுமாலை 6 மணியளவில் நாவற்குழி 300 வீட்டுத்திட்டப் பகுதியில் அமைந்துள்ள மதகு ஒன்றில் இடம்பெற்றது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த யேசுதாசன் அமிநதாப் (வயது 20) என்றஇளைஞனே உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகசாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-11,89)



யாழ்ப்பாணம் பருத்தித்துறை வியாபாரிமூலைப் பகுதியில் மாவீரர் நாள் 27.11.2016 என எழுதப்பட்டிருந்தது.

(படங்கள்: மகாலிங்கம்)

# தோனி ஸ்ரைலில் ஆட்டத்தை முடித்து வைத்தார் தரங்க சிம்பாப்வே முத்தரப்புத் தொடரில் சம்பியனானது இலங்கை




அணித் தலைவர் உபுல் தரங்க, குசல் மென்டிஸின் சிறப்பான துடுப்பாட்டம் கைகொடுக்க முத்தரப்பு ஒருநாள் தொடர் இறுதிப் போட்டியில் சிம்பாப்வே அணியை 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்திய இலங்கை அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் நேற்று நடந்த இறுதிப் போட்டியில் இலங்கை - சிம்பாப்வே அணிகள் மோதியது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இலங்கை அணியின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் தொடக்கம் முதலே திணறி வந்த சிம்பாப்வே அணி 36.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

சிம்பாப்வே அணியில் அதிகபட்சமாக மசகட்சா 36, சேன் வில்லியம்ஸ் 35 ஓட்டங்கள் எடுத்தனர்.

இலங்கை அணி சார்பில் வந்தர்சே, குணரத்ன ஆகியோர் தலா 3, சச்சித் பத்திரன 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதன் பின்னர் 161 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி இலங்கை அணி களமிறங்கியது.

தொடக்க வீரர்களாக தனஞ்செய டி சில்வா, குஷல் பெரேரா ஆகியோர் களமிறங்கினர்.

தனஞ்செய டி சில்வா டக்- அவுட்டாகி ஏமாற்றினார். குஷல் பெரேராவும் (14), அடுத்து வந்த டிக்வெலவும் (16) நிலைக்கவில்லை.

இதனால் இலங்கை அணி நெருக்கடியான நிலையில் இருந்தது. இதன் பின்னர் ஜோடி சேர்ந்த குஷல் மெண்டிஸ், அணித் தலைவர் உபுல் தரங்க ஆகியோர் நிதானமாக ஆடி அணியை மீட்டனர்.

குஷல் மெண்டிஸ் 57 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஆடிய உபுல் தரங்கவும் அரைச் சதம் அடித்தார்.

இதனால் இலங்கை அணி 37.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 166 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

தோனி ஸ்ரைலில் ஆட்டத்தை முடித்து வைத்த அணித் தலைவர் உபுல் தரங்க 57 ஓட்டங்களுடனும், குணரத்ன 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சிம்பாப்வே அணி சார்பில் பிரைன் விட்டோரி 3 விக்கெட் வீழ்த்தினார்.

போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் இலங்கை அணியின் குஷல் மென்டிஸ் தெரிவானார். (க)

# இந்தியாவுக்குள் நுழைய முடியாது திரும்பி வந்த ஞானசார தேரர்



இலங்கையில் இருந்து இந்தியா சென்றிருந்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

பௌத்த நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் இந்தியா சென்றிருந்த தேரரை, இந்தியாவுக்குள் நுழைய குடிவரவு அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது

அதற்கமைய அவர் நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளார். விசா பிரச்சினையே அதற்கு காரணம் என தெரியவந்துள்ளது.

இலங்கை-இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் வழங்கப்பட்டிருந்த இரட்டை நுழைவு விசா காலம் நிறைவடைந்திருந்தமையே இந்த சிக்கல் ஏற்பட காரணமாகியுள்ளது.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஞானசார தேரர் அதன் பின்னர் நேபாளத்துக்கு விஜயம் மேற்கொண்டு மீண்டும் இந்தியா சென்றிருந்தார்.

அதற்கமைய அவருக்கு இந்தியாவுக்குள் நுழைவதற்காக அனுமதிக்கப்பட்டிருந்த இரட்டை நுழைவு விசா நிறைவடைந்துள்ளது.

எனினும் அவர் அதனை அறிந்திருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களை ட்ரம்ப் நிவர்த்தி செய்வார் - ஜனாதிபதி

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைஆணைக்குழுவினால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிவர்த்தி செய்வார் என நம்புவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வில் அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு டொனால்ட் ட்ரம்புக்கு கடிதம் ஒன்றை ஜனாதிபதி அனுப்ப உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் எமது படைவீரர்களைப் பாதுகாக்க முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டின் எதிர்கால அபிவிருத்தி செயறபாடுகளுக்கு அமெரிக்கா உதவும் என நம்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

# போதைப்பொருளைத் தேடி 800 முறை சுற்றிவளைப்பு

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள போதைப்பொருள் தொடர்பில் 800 இற்கும் அதிகமான சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புக்கள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பணியகத்தின் பொறுப்பதிகாரி நந்தன பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சுற்றிவளைப்புகளுக்கு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

மேலும் சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்படுவோர் தொடர்பில் நீதவான் மற்றும் மேல் நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்படுவதாகவும் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (இ-7)


யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்

**Jaffna Science Association**

**Special General Meeting**

A SGM of the Jaffna Science Association (JSA) is scheduled to be held on **8th of December 2016 at 10.00am at the 1B Lecture hall, Natural Science Block, University of Jaffna.**

Agenda:

- **Adaptation of the proposed article of association**
- **Publication of a JSA Journal and Appointment of and Editorial Committee**
- **Updates of JSA activities**

All members are kindly requested to present to the meeting.

Thank you

*General Secretory, Jaffna Science Association*

**www.thejsa.org**

**வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT) பயிலுநர் ஆட்சேர்ப்பு**

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், இலங்கை சோசலிசக் குடியரசின் 1980ம் ஆண்டின் 31 -ம் இலக்க வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும். இந்நிறுவனத்திற்கு பின்வரும் தகைமையுடைய வடமராட்சியில் நிரந்தரமாக வசிக்கும் 18-45 வ்யதிற்குற்பட்ட ஆண்/பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:- கணக்கு லிகிதர் (பயிலுநர்) -01

கல்வித்தகைமை:- க.பொ.த (உயர்தரம்) சித்தி (கணக்கீடு உட்பட) அல்லது மேற்பட்ட தகைமை

ஏனைய தகைமைகள் :- கணனி, ஆங்கில அறிவு உட்பட சமூக சேவையில் ஆர்வமுள்ளவர்

**குறிப்பு :- பயிலுநர் காலத்திற்கு மாதாந்தம் ஊக்குவிப்பு தொகை ரூபாய் 7500.00 வரை வழங்கப்படும்.**

விண்ணப்பதாரி தமது சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பங்களை தலைவர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT), அல்வாய் கிழக்கு, அல்வாய் என்ற முகவரிக்கு 02.12.2016 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

(சி-6499)

# புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளன்று பிரித்தானியாவில் களைகட்டிய பொங்கல் நிகழ்வு





விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 62 ஆவது பிறந்த நாள் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு பிரித்தானியாவிலும் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வு பிரித்தானியாவில் அமைந்துள்ள உலகத் தமிழர் வரலாற்று மைய வளாகத்தில் (Mill Farm Lane, Barnbury, Oxford, OX173NX) இடம்பெற்றது.

இதேவேளை, புலம் பெயர் நாடுகள் எங்கிலும், நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் மிக உணர்வுபூர்வமாக கொண்டாடப் பட்டது.

இலங்கைத் தமிழர்களுக்காக அரசை எதிர்த்து ஆயுதப் போராட்டம் நடத்திய பிரபாகரன் இலங்கையில் நடை பெற்ற இறுதிப் போரில் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது இருப்பினும் இதனை ஈழத்தமிழர்கள் ஏற்கவில்லை.

மேலும் இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை இன்னும் தொடர்ந்த போதிலும், பிரபாகரன் பிறந்த நாளை பல வேறு அரசியல் கட்சிகளும் கொண்டாடியமை குறிப்பிடத் தக்கது. (இ-7)


5ம் ஆண்டு நினைவுகளுடன்

திருமதி கனகராசா சரஸ்வதி(கிளி)

மலர்வு 30.08.1947 உதிர்வு 23.11.2011

திதி:திரயோதசி



எம் இனிய அன்னையே!
அன்பின் ஒவியமே!
எம் தாய்க் காவியமே!
அன்புக்கு இலக்கணமாய்
வாழ்வில் வாழ்ந்து காட்டினாய்
எமை வழி நடத்திய
எம் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6712)

ஒட்டுவெளி, மிருசுவில். க.கனகேந்திரன் குடும்பம்


## நாம் வாழ்க்கையிலே வெற்றி பெறுவதற்கு முற்போக்கான நபர்களுடன் பழக வேண்டும்

### ஜனாதிபதி மைத்திரி அறிவுரை



தன்னைவிட அறிவு, மதிநுட்பம் மற்றும் அனுபவங்களைக் கொண்ட நல் வழிகாட்டுவோரை நெருங்கிய நண்பர்களாக கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கோட்டே ஆனந்தா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்று முன்தினம் முற்பகல் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் நீதிமன்ற வரலாற்றில் முதற்தடவையாக கொலையொன்றுக்காக பதினெட்டுப் பேருக்கு கடந்த 25 ஆம் திகதி மரண தண்டனை வழங்கப்பட்ட பின்னர், தண்டனை பெற்றோரின் குடும்பத்தவர்கள் ஒவ்வொருவர்மீது குற்றஞ் சாட்டிய விதத்தை நினைவூட்டிய ஜனாதிபதி , தகுதியில்லாத நபர்களுடன் நட்புக் கொள்வதனால் ஏற்படும் பாதிப்பை சுட்டிக்காட்டினார்.

தற்போதைய நவீன தொழில்நுட்பத்துடன் இளைஞர்கள் இணைந்துள்ளனர். ஆனால நாம் எதிர்பார்க்கும் உலகம் தொழில்நுட்ப கருவிகளில் இல்லையென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சில நாட்களுக்கு முன்னர் நாட்டின் பிரபல ஆண்கள் பாடசாலையொன்றின உட் பிரச்சினைக்காக பாடசாலைக்கு வெளியே மாணவரைத் தாக்கிய சம்பவம், பாடசாலை மாணவர்களின் பொருத்தமற்ற, பண்பற்ற நடத்தையாகுமெனவும் சுட்டிக்காட்டினார்.

பாடசாலையில் விசேட திறமை காட்டிய மாணவர்களுக்கும் பழைய மாணவர்களான மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய, முன்னாள் கோட்டே நகரசபைத் தலைவர் ஜனக ரோகண, மேல் மாகாண சபை உறுப்பினர் ஜகத் குமார ஆகியோருக்கும் ஜனாதிபதியால் விருது வழங்கி வைக்கப்பட்டது. (இ-7)

## இராசி பலன்

28.11.2016

(கார்த்திகை 13, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 3.57 மணிவரை
விசாகம் முன்னிரவு 10.03 மணிவரை
சுபநேரம் 12.13-1.23 மணிவரை
இராகுகாலம் 7.43-9.13 மணிவரை
போதயண அமாவாசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி-பரணி மாலை 3.25 இற்கு விருச்-சந் | | |
| செவ் | | | ராகு |
| சுக் புத | சூரி சனி | சந் | குரு |

**மீனம்:** காலையில் தடைப்பட்ட காரியமொன்று மாலைநேரம் கைகூடும் வாய்ப்புண்டு, பிரயாண பயமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை, சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**மேடம்:** கால நேரத்தில் கலகலப்பான சூழ்நிலையும் மாலை நேரம் சஞ்சலங்களும் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், கரைந்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அநுகூலமாக நடந்து கொள்வர், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** புதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வீண்பழிகள் அகலும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** தொலைதூரத்து செய்திகள் அநுகூலம் தரும், வாகன சுகமுண்டு, புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், அதிகாரிகள் அநுகூலமாக நடந்து கொள்வர்.

**சிம்மம்:** நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், சகோதர ஒற்றுமை மேலோங்கும், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**தனுசு:** பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர்களின் ஒத்தாசைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




யாழ். வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் சேர்.வைத்தியலிங்கம் குமாரசவாமி ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக க. இராஜேஸ்வரன், திருமதி மேகலை இராஜேஸ்வரன், கௌரவ விருந்தினராக ச. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பரிசுத்தினம்

யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசுத்தினம் நாளை 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மாலதி சுப்பிரமணியம் அரங்கில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் பேரம்பலம் தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராசா, சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய சின்னத்துரை தவராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-3)

## பரிசில் நாள் நாளை

யாழ்.மிருசுவில் றோ.க. த.க.பாடசாலையின் பரிசில் நாள் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் எப்.ரி. எடிசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த. கிருபாகரன், கௌரவ விருந்தினர்களாக மிருசுவில் பங்குத் தந்தை எக்ஸ். டபிள்யு ஜேம்ஸ், தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.அன்ரன் கமிலஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த மறப்பவர்கள் இன விடுதலையைக் கோரத் தகுதியற்றவர்கள்

## மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த மறப்பவர்கள் தமிழின விடுதலையை கோருவதற்குத் தகுதியற்றவர்கள் என வடமாகாணசபை உறுப்பினர். எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழின விடுதலைக்காக போராடி உயிர்நீத்த மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலி நிகழ்வு நேற்று காலை யாழ். நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபி முன்றலில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் ,

தமிழீழ தேசிய விடுதலை போராட்டத்திலே தமது இன்னுயிர்களை ஈகம் செய்த வீரமறவர்களுக்கு இந்த மாவீரர் நாளில் வீர வணக்கத்தை செலுத்தி நிற்கின்றோம்.

தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டம் தமிழ் இனத்தினுடைய எழுச்சி போராட்டமாக உரிமை கோரிக்கைகளாக பல்வேறு ஒப்பந்தங்களாக செய்யப்பட்டது. எமது ஜனநாயக வழி போராட்டங்கள், அஹிம்சை வழி போராட்டங்கள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1969 இல் தமிழ் ஈழத்துக்கான ஒரு ஆயுதப் போராட்டம் தான் சரி என்ற அடிப்படையில் விடுதலை இயக்கங்கள் ஆயுத போராட்டத்தை ஆரம்பித்தன.

பின்னாளில் பல வேறு இயக்கங்களாக உருவாகிய போது 1974 ஆம் ஆண்டு புதிய புலிகள் இயக்கம் தோற்றம் பெற்றது. 1976 ஆம் ஆண்டு மே 5 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த சேர்ந்த 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் தமது இன்னுயிர்களை தியாகம் செய்துள்ளார்கள். அனைத்துக்கும் மேலாக ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட எமது அப்பாவி மக்களை இந்தப் போராட்டத்தில் இழந்துள்ளோம்.

அவர்கள் அனைவருக்கும் இந்த நாளில் தலை சாய்த்து வீரவணக்கத்தை செலுத்துகிறோம்.

எனவே நாம் இறந்து போன அத்தனை மாவீரர்கள், வீரமறவர்கள், மாமனிதர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்த வேண்டும். எந்த சக்திகள் எமக்கு அடக்கு முறைகளை பிரயோகித்தாலும் யாரிடமும் நாம் அனுமதி பெறத்தேவையில்லை.

எதிர்காலத்தில் தமிழ் இனம் தன்னைத்தானே ஆளக்கூடிய தீர்வை பெற வேண்டும். நிரந்தர அரசியல் தீர்வைப் பெற வேண்டும். நடந்த போரிலே நடைபெற்ற இனப்படுகொலை, போர்க் குற்றம் மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும் என்ற கொள்கையில் இருந்து நாம் மாறக் கூடாது.

மாவீரர்களுக்கும் போரில் இறந்த பொதுமக்களுக்கும் வீரமறவர்களுக்கும் அஞ்சலி செலுத்த மறப்போமானால் நாங்கள் விடுதலையை கோருவதற்கு தகுதியற்றவர்களாவோம்.

ஆகவே எமக்கு தீர்வு கிடைத்த பின்னரும் இந்த மாவீரர்களை நாம் ஆண்டாண்டு காலமாக நினைவிலே போற்ற வேண்டும். தமிழர் தாயகத்தில் எந்தெந்த இடங்களில் சாத்தியமோ அதாவது கோவில்கள், துயிலும் இல்லம், தேவாலயம், வீடுகள் போன்றவற்றில் அவர்களை நினைத்து பிரார்த்தனை செய்ய வேண்டும்.

நிரந்தர அரசியல் தீர்வு காணப்படும் வரை எமது ஜனநாயக வழிப் போராட்டம் தொடரும். இன்று ஆயுத வழி போராட்டம் தான் நசுக்கப்பட்டிருக்கிறதே தவிர எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தை ஒருபோதும் ஒருவராலும் நசுக்க முடியாது. இது தொடந்து முன்னெடுக்கப்படும்.

மறைந்த மதவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த பயப்படுவோமானால், மறப்போமானால் விடுதலை பெற தகுதி அற்றவர்கள்.

ஆகவே எமது இலக்கை அடைய தொடர்ந்தும் எமது போராட்டங்களை முன்னெடுத்து செல்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## தரம் ஐந்து மாணவர் கௌரவிப்பு

யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் ஐந்து மாணவர் கௌரவிப்பு விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாலதி சுப்பிரமணியம் அரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பேரம்பலம் தனபாலசிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக வலி.மேற்கு உதவிப் பிரதேச செயலரும் பழைய மாணவியுமான திருமதி.கி.செந்தூரன் பழைய மாணவியும் (கோண்டாவில்) சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான செல்வி. ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-3)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகத்தில் அண்மையில் கலைவிழா இடம் பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.த.கலாமணி மங்கல விளக்கேற்றுவதனையும் கலாமணிக்கு கலாநிதி.பா.தனபாலன் கல்வியியல் ஆய்வுக்கதிரோன் எனும் பட்டத்தினை வழங்குவதனையும் மாணவிகளின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
♦ செய்திகள்
♦ புகைப்படங்கள்
♦ நிகழ்வுகள்
♦ பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber

# மாவீரர்களின் நினைவு எழும்போது எமது கனவுகள் நனவாகும்

## அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மாவீரர்களின் நினைவு கூட்டாக எழுகின்ற போது எமது கனவுகள் நனவாகும் என வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழின விடுதலைக்காக போராடி உயிர்நீத்த மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலி நிகழ்வு நேற்றுக்காலை யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவு தூபி முன்றலில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகம் முழுவதிலும் பரந்து வாழும் அனைத்து தமிழ் மக்களுக்கும் நவம்பர் 27 ஆம் திகதி மிகவும் புனிதமான நாள் ஆகும். உலகம் முழுவதும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு தமது உயிரை ஆகுதியாக்கிய வீர மறவர்களின் நினைவை நெஞ்சில் இருத்தி அவர்களுடைய கனவை நனவாக்க வேண்டுகின்ற ஒரு திருநாளாக இது அமைந்துள்ளது.

இந்த நிகழ்வு பல்வேறு இடங்களில் எழுச்சி பூர்வமாக நடைபெறுகிறது. ஆனால் அரசாங்கம் சிலவேளைகளில் இந்த நிகழ்வைக்கூட சர்வதேச அரங்கில் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முனையலாம். அதாவது தமது அரசாங்கம் நல்லாட்சி அரசாங்கம் என்றும் தமிழ் மக்கள் தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த அனுமதி அளித்துள்ளோம் என்றும் கூறிக்கொள்ள முனையலாம்.

ஆனால் கடும் நெருக்கடி நிறைந்த கடந்த கால ஆட்சியிலும் கூட இதே அஞ்சலி நிகழ்வுகள் தமிழ் ஈழத்தின் அனைத்து பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

பொதுமக்கள் இம்முறை கணிசமான அளவு திரண்டிருந்தாலும் கூட காலம் காலமாக உணர்வுபூர்வமாக இது நடைபெற்று வருகின்றது.

கூட்டுப்பிரார்த்தனைக்கு எப்போதுமே பலன் அதிகமாக தான் இருந்து வந்துள்ளது. எனவே தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மாவீரர்களின் நினைவு கூட்டாக எழுகின்ற போது எமது கனவுகள் நனவாகும். கூட்டு சிந்தனை உதயமாகும் போதும் நிச்சயமாக எமது அரசியல் பிரச்சினைக்கு நியாயமான தீர்வும் எங்களை நாங்களே எமது தாயகத்தில் ஆளும் வாய்ப்பும் வெகு விரைவில் கைகூடும் என அவர் மேலும் தெரிவித்தார். இதே வேளை வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் உரையாற்றுகையில்,

போர் நிறைவுற்று 7 வருடங்கள் கடந்த நிலையில் அழுவதற்கான அடிப்படை உரிமைகளை கூட தராத இந்த இலங்கை அரசிடம் தடைகளை தாண்டி வீர வணக்கம் செய்து வருகிறோம். தமது பிள்ளைகளை இழந்த அனைத்து உறவுகளும் தமது உறவுகளை நினைத்து அஞ்சலிக்க வேண்டும். கண்ணீர் விட்டு அழுது உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய புனித நாள் இதுவாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

பாடசாலை அதிபர்களே!

01 – 12 வரையான வகுப்புக்களுக்கான
விரிவான பாடத்திட்டமிடல் புத்தகங்கள்,
பாடக் குறிப்புப் புத்தகங்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.

புதிய பாடத் திட்டம்
2017

ஷாம்பவி பதிப்பகம் கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம். 021 222 4143, 077 618 4425.

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் முக்கிய அறிவித்தல்

2016.10.18,19 ஆந் திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட சந்தைகள் , இறைச்சிக் கடைகள் , சிற்றுண்டிச்சாலைகளுக்கான கேள்வியில் சித்தி பெற்றவர்கள் நேரில் வருகை தந்து வதிவிடத்தினை உறுதிப்படுத்தி கேள்வித் தொகையின் 1/3 பகுதிப் பணத்தினை 2016.11.30 ஆந் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பதாக சபையில் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கேள்வி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும். தவறின் மீள் கேள்வி கோரப்படும் என்பதனை அறியத்தருகிறேன்.

(சி-6491) ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-12 முருகேசர் வளவு ஒழுங்கை ஆதன இல.09 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் கனகமணி என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இதன் மொத்த நிலப்பரப்பு 1 குளி 01 ஆகும். இதில் தெற்கு பக்கமாக நிலப்பரப்பு 00 குளி 8.97 ஐ நல்லூர் காசிப்பிள்ளை சிவராம் கைம்பெண் கனகமணி தனது மகள் கந்தையா நாகசெல்வம் பெண் சீதாலட்சுமிக்கு பிரசித்த நொத்தாரிசு க.குணரத்தினம் முகதாவில் நிறைவேறிய உறுதி இல. 551/29.11.1973 மூலம் சீதனமாக வழங்கியுள்ளார். இதன் மிகுதி ஆதனம் நில.பர.00 குளி 10.03 ஐ நல்லூர் காசிப்பிள்ளை சிவராம் கைம்பெண் கனகமணி அவ்வூர் ஏகாம்பரம் இராசரத்தினம் பெண் இராசலட்சுமிக்கு பிரசித்த நொத்தாரிசு க.குணரத்தினம் முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி இல.570/01.02.1974 மூலம் அறுதியாக விற்றுள்ளார் எனவும் குறித்த ஏகாம்பரம் இராசரத்தினம் பெண் இராசலட்சுமியால் பிரசித்த நொத்தாரிசு வேலுப்பிள்ளை மயில்வாகனம் முகதாவில் நிறைவேறிய நிபந்தனை அறுதி உறுதி இல. 3874/31.01.1984 மூலம் ஜோசப்பின் தங்கமலர் ஜோக்கியம் என்பவருக்கு நிபந்தனை அறுதியாக வழங்கப்பட்டிருந்தாலும் இவ்வாதனம் தனது தாயாரால் அறுதியாக்கப்பட்ட குறித்த நில.பர.00 குளி 10.03 ஐ தனக்கு உறுதி இல. 551/29.11.1973 மூலம் வழங்கப்பட்ட சீதன ஆதனமான இதன் மிகுதி நில.பர. 00 குளி 08.97 உடன் 1973 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித எதிர்ப்பும் இன்றி தங்கு தடையற்ற தனது ஆட்சியில் உள்ளதாக பிரசித்த நொத்தாரிசு **V.T.** சிவலிங்கம் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி இல.3952/23.02.2015 மூலம் வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு **V.T.** சிவலிங்கம் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி இல. 4022/19.04.2015 மூலம் நில.பர. 1 குளி 00.36 ஐ வட்டு.தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகசெல்வம் செல்வகாந்தன், நாகசெல்வம் ராஜகாந்தன் ஆகியோரால் வட்டு.தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நடராசா மகேஸ்வரன் பெண் கல்யாணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆதன விபரம்- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயில் பற்று நல்லூர் இறை "சிங்கத்தின் வளவு" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் **S.** பாலேந்திரன் அவர்களின் வரைபட இலக்கம் 2015/4/33-2015.01.25 ல் துண்டு-1, 2 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 00.36 ஆகும். இதற்கு எல்லை கிழக்கு - **V**. இராமலிங்கம், வடக்கு- பொன்னுத்துரை மனோகரன், மேற்கு- ஒழுங்கை, தெற்கு- **V**.இராமலிங்கம்.

தற்போது இவ்வாதனம் நடராஜா மகேஸ்வரன் பெண் கல்யாணி என்பவரால் தனது பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்துமூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நடராஜா மகேஸ்வரன் பெண் கல்யாணி என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை**

(சி-6490)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 25 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:Accountant/ வங்கியாளர் லண்டன்<br>தொ.இ: B/6528 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 20<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6526 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 3 3/4 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6531 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 31செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தான்வரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6529 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை சூரிசெவ் 1இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ சொந்தத்தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/6533 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 33செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/6530 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி சூரி,செவ் 5இல<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/Lலண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6536 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரம் செவ் 2இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: வைத்தியர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/6532 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.







மன்னார், பெரியபண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. வவுனியா நகரசபையின் முன்னாள் உபதலைவர் எம்.எம்.ரதன் தலைமையில நேற்று முற்பகல் 11 மணிக்கு அங்கு சென்ற இளைஞர்கள், பொதுமக்கள் மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு செய்ததுடன், அங்கு உள்ள நினைவுக் கற்களுக்கு மலர்தூவி விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)





தமிழ் மக்களது விடுதலைக்காக தம் உயிரை தியாகம் செய்த வீரர்களை நினைவு கூரும் "மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள்" வடக்கின் பல பாகங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அந்த வகையில் உயிர் நீத்த வீரர்களை நினைவு கூரும் "மாவீரர் தின" நினைவேந்தல் நிகழ்வுகள் மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது. உயிர் நீத்த மாவீரர்களை நினைவு கூர்ந்து நேற்று காலை 8.30 மணியளவில் மன்னார் கரிசல் கப்பலேந்தி மாதா ஆலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானு வேல் செபமாலை அடிகளார் தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதோடு, தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் உயிரை தியாகம்செய்த மாவீரர்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (படங்கள்:பொ.சோபிகா)

## பனங்காமம் மூன்று முறிப்பு பகுதியில் 200 வீரை மரத்துண்டங்கள் கைப்பற்று

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்குட்பட்ட மாங்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள பனங்காமம் மூன்று முறிப்பு பகுதியில் அரச காட்டுக்குள் அனுமதிப்பத்திரமின்றி வீரை மரங்களை வெட்டி 200 துண்டுகளாக்கிய நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மாங்குளம்பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியதகவலையடுத்து மாங்குளம் பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி மாலின் பெரேரோவின் உத்தரவிற்கமைய மாங்குளம் பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர்பிரியதர்சனா தலைமையில் பொலிஸ் சார்ஜண்ட் ஜெயசேகரா (29192) மற்றும் பொலிஸ் கொஸ்தாபல்க ளான வசந்த, (13816) ஹெட்டியாராச்சி, (60588) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியின் தேடுதலின் போதே வீரைமரத் துண்டங்கள் மீட்கப் பட்டுள்ளன.

இச்சம்பவத்தின் போது மீட்கப்பட்டுள்ள வீரை மரத் துண்டுகள்மாங்குளம்பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவஇடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ள சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)




## கிளிநொச்சியில் மாவீரர் நாள் வாசகங்களும் பிரபாகரனை வாழ்த்தி சுவரொட்டிகளும்






(பரந்தன்)

தமிழ் இனத்தின் விடிவுக்காக போராடி தமது உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூர்ந்து ஒவ்வொரு வருடமும் கார்த்திகை 27ஆம் திகதி தமிழ் மக்களினால் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆனால் யுத்தம் முடிவடைந்து மக்கள் மீள் குடியமர்ந்த பின்னர் கடந்த ஏழு வருடங்களாக தங்கள் பிள்ளைகளை நினைவுகூர முடியாதவர்களாக தமிழ்மக்கள் தவித்து வந்துள்ளனர்.

ஆனால் நேற்றையதினம் குறித்த அஞ்சலி நிகழ்வுகள் வடக்கின் மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெற்றது.

இந்நிலையில் கிளிநொச்சியில் மாவீரர் நாள் வாசகங்கள் என்பன எழுதப்பட்டும் தமிழீழ தேசியத் தலைவரின் 62ஆவது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் கரிகாலன் என பிரசுரிக்கப்பட்ட சுவரொட்டிகளும் வீதியோரங்களில் நேற்று காணப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு விசுவமடுப்பகுதியில் தமிழீழ தேசியத் தலைவரின் 62ஆவது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் கரிகாலன் என பிரசுரிக்கப்பட்ட சுவரொட்டிகள் ஐம்பதுக்கு மேற்பட்டவை ஏ35 பாதையில் வீசப்பட்டிருந்தன.

அத்துடன் வட்டக்கச்சி சந்தையில் உள்ள விளம்பரப்பலகையிலும் மற்றும் தார் வீதிகளிலும் நேற்று முன்தினம் மாவீரர்நாள் தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

மேலும் நேற்றையதினம் மாலை 6.05 மணிக்கு மாவீரர் நாள் நினைவு நிகழ்வுகள் கனகபுரம் மற்றும் முழங்காவில் துயிலுமில்லங்களில் பெற்றோர், உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டன. (2-312)

## வாடி அமைத்த தென்னிலங்கை மீனவர்கள் பிணையில் விடுதலை

மன்னார் - முள்ளிக்குளம் - காயாக்குழி பிரதேசத்தில் அத்துமீறி வாடிகளை அமைத்த தென்பகுதி மீனவர்களை சொந்த பிணையில் செல்ல மன்னார் மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

காயக்குழி பிரதேசத்தில் தென்பகுதி மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடாத வகையிலும் மீனவர்கள் அங்கு தங்கியிருப்பதற்கும் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

காயாக்குழி பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் அந்த பிரதேசங்களில் அத்துமீறி நிரந்தர வாடிகளை அமைக்கின்றமை தொடர்பாக மன்னார் மீன வர்களினால் சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

மன்னார் நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்றத்தில் முன்னிலையான தென்னிலங்கையைச் சேர்ந்த 6 மீனவர்களை சொந்த பிணையில் செல்ல மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

அத்துடன் குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிங்கள மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக மீன்பிடி அமைச்சின் செயலாளர் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை ஆராயவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-281)

## ஆலோசனைக்குழுக்கூட்டம்

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டம் அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் அமைச்சு கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

குறித்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சினாலும் அமைச்சிற்குட்பட்ட திணைக்களங்களினாலும் முன்னெடுக்கப்படும் பல செயற்றிட்டங்கள் பற்றியும் அவற்றிலுள்ள குறை நிறைகள் பற்றியும் அவற்றின் முன்னேற்றம் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டதோடு, எதிர்கால திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட்டன. (2-281)

## இருளில் இருந்து வெளிச்சத்திற்கு வவுனியாவில் நடமாடும் சேவை

(குருமன்காடு)

மின்சக்தி மற்றும் புத்தாக்க சக்தி அமைச்சின் நடமாடும் சேவையொன்று நேற்று வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

வவுனியா மாவட்டத்தினை நூறு வீதம் மின் வழங்கல் சேவைக்குள் உள்வாங்கும் பொருட்டு இருளில் இருந்து வெளிச்சத்திற்கு என்ற தொனிப்பொருளில்இடம் பெற்ற இந் நடமாடும் சேவையின் ஒரே நாள் சேவை மற்றும் வவுனியா மக்கள் எதிர்கொள்ளும் மின்சார பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு இந் நடமாடும் சேவை இடம்பெற்றிருந்தது.

இதன்போது மத்திய மின் சக்தி மற்றும் புத்தாக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் அவ் அமைச்சின் செயலாளர் கலாநிதி பட்டாகொட் உட்பட மின்சார சபையின் உயர் அதிகாரிகள், அமைச்சின் அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது வவுனியா மாவட்ட மக்கள் நூற்றுக் கணக்கில் கலந்துகொண்டு தமது மின்சார பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக் கொள்ள வருகை தந்திருந்ததுடன் மின்சார உபகரணங்கள் மற்றும் சூரிய சக்தி மின் கலங்கள் தொடர்பான விற்பனை கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. (2-250)

# 584 விவசாயிகளின் உரமானியக் கொடுப்பனவு வங்கிக்கணக்குகளின் ஊடாக பகிர்ந்தளிக்கப்படும்

## ஒலுமடு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

**ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட சிறு குளங்களின் குளக் காணிகளின் கீழும் மற்றும் மானாவாரியாகவும் 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையை 584 விவசாயிகள் 2 ஆயிரத்து 18.5 ஏக்கரில் மேற்கொண்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடி 93 ஆயிரத்து 750 ரூபா நிதி விவசாயிகளின் வங்கிக் கணக்குகளின் ஊடாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தினால் கடந்த காலங்களில் மானிய உர விநியோகம் உரமாக விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில் இம்முறை ஏக்கர் ஒன்றிற்கு 5 ஆயிரம் ரூபா வீதம் விவசாயி ஒருவருக்கு ஆகக் கூடியது 5 ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபா பணமாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கமநல சேவை நிலையங்கள் ஊடாக நடப்பாண்டில் காலபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒலுமடு கமநல சேவை நிலையப் பிரிவிலுள்ளவிவசாயிகளில்இலங்கை வங்கியூடாக 416 விவசாயிகளின் ஆயிரத்து 411.5 ஏக்கருக்கு 70 இலட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபா பணம் வழங்கப்படவுள்ளது.

மக்கள் வங்கியூடாக 168 விவசாயிகளின் 607.25 ஏக்கருக்கு 30 இலட்சத்து 36 ஆயிரத்து 250 ரூபா பணம் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# மரம் நடுகை மாதத்தையொட்டி

## 200 பயனாளிகளுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கி வைப்பு



(மல்லாவி)

நெடுங்கேணிபனைதென்னை கூட்டுறவுச் சங்கத்தினால் பயன் தரும் மரக்கன்றுகள் அங்கத்தவர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் ஏற்பாட்டில் கடந்த 25 ஆம் திகதி ஊழியர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குமாக 200 பயனாளிகளுக்கு பயன்தரும் மரங்களான மாங்கன்றுகள், தேசிக்கன்றுகள், ஈரப்பலா கன்றுகள், தென்னங் கன்றுகள் போன்ற பயன்தரும் மரக்கன்றுகள் வடக்கு மாகாண மரம் நடுகை மாதத்தையொட்டி மரக்கன்றுகள் பனை, தென்னை கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் கி.செந்தூர்செல்வனினால் வழங்கப்பட்டது. (2-15)

# ஆற்றுமணல் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த இடம் முற்றுகை

## ஒருவர் கைது; மன்னாகண்டலில் சம்பவம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிலுள்ள மன்னாகண்டல் வசந்தபுரம் மக்கள் குடியிருப்பு பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் 2 ஆயிரத்து 500 லோட் உழவு இயந்திரப் பெட்டி ஆற்று மணலைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த இடமொன்று கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஆற்று மணலைக்களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நபர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி உத்தரவிற்கு அமைய கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் அணியினரின் முற்றுகையின் போதே அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் பெரும் தொகையான ஆற்றுமணல் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த இடம் முற்றுகையிடப்பட்டது.

இச் சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்ட மணல் களஞ்சியத்தையும் கைதான சந்தேக நபரையும் கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தியுள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள மணல் களஞ்சியத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கைப்பற்றப்பட்டுள்ள மணல் தொடர்பான விபரத்தை வழங்கவுள்ளதாகவும் கைதான சந்தேக நபரையும் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு

# 55ஆயிரம் மி.லீ.கசிப்பு கோடா கைப்பற்று

## கட்டைக்காடு பெரியகுளம் காட்டில் சம்பவம்



(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குட்பட்ட தர்மபுரம் பொலிஸ் பிரிவில் உள்ள கட்டைக் காடு பெரியகுளம் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்த நிலையில் மூன்று பரல்களில் உள்ளடங்கிய 55 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புக் கோடா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்தி நிலையம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாகவும் தர்மபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

தர்மபுரம் பொலிஸ் நிலையத்திற்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எம்.என்.டி.சதுரங்க தலைமையில் விரைந்த பொலிஸ் அணியினரின் சுற்றி வளைப்பின் போதே கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு கசிப்பு கோடா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்தி நிலையமும் நிர்மூலமாக்கப்பட்டது.

இதன்போது கைப்பற்றப்பட்டுள்ள கசிப்பு கோடாவும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களும் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவ இடத்திற்கு பொலிஸார் வருவதை அறிந்து கொண்டு தப்பிச் சென்றுள்ள சந்தேக நபர்கள் தொடர்பான தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தர்மபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மாடுகளைத்திருடி இறைச்சியாக்கியவர்கள் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைப்பு

## வீட்டிலிருந்து மாடுகளின் எச்சங்கள் மீட்பு



கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் மாடுகளை திருடி இறைச்சியாக்கியவர்கள் பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம், நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில், மாட்டு எச்சங்கள் கிடப்பது தொடர்பில் அவதானித்த பிரதேச மக்கள், இது தொடர்பில் பொலிஸாரிடமும், கரைச்சி பிரதேச செயலாளரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸாரும், கரைச்சி பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் ஆகியோர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது வீட்டுரிமையாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டதுடன், தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, குறித்த பகுதியில் நீண்ட காலமாக பசுக்கள் உட்பட பல மாடுகள் காணாமற்போனவை தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவை இறைச்சிகளாக்கப்பட்டு இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குறித்த நபர்கள் மாடுகளை இறைச்சியாக்கி, எச்சங்களை வீட்டின் அருகில் புதைத்துள்ளனர். வீட்டை சுற்றி தோண்டிய போது மாடுகளின் தலைகள் உள்ளிட்ட பல எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை மேலும் ஒரு பசு மற்றும் மற்றுமொரு கன்று ஒன்றும் இறைச்சிக்காக கட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சம்பவம் தொடர்பிலான வசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(2-312-15-254)

# இடிந்துவிழும் அபாய நிலையில் புதுமுறிப்புப் பாலம்



கிளிநொச்சி உருத்திரபுரம், மேற்கு, வடக்கு, சிவநகர், புதுமுறிப்பு ஆகிய கிராமங்களின் போக்குவரத்துப் பாதையாக அமைந்துள்ள புதுமுறிப்பு பாலம் இடிந்துவிழும் அபாய நிலையில் காணப்படுவதாக பொது மக்கள், விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக் கிராமங்களின் பின்புறமாகவுள்ள பிரதான கழிவு வாய்க்கால் பகுதியிலுள்ள கனகபுரம் பாலம் ஏற்கனவே உடைந்து விழுந்துவிட்டது. அடுத்துள்ள சுடலைப் பாலம் இதுவரை போடப்படாமல் உள்ளது.

அடம்பன் சோலையில் 300 இற்கு மேற்பட்ட வயற் காணிகளுக்குச் செல்லவும் சிவன் சோலைப் பகுதி மக்கள் பயன்படுத்தவும் உதவியாக இருந்த மதகு திட்டமிடப்படாத சிலரின் நடவடிக்கையால் உடைக்கப்பட்டுவிட்டது. உருத்திரபுரம் பிரதான வீதியின் நீரோடும் மதகுப் பகுதிக்கு பாலம் கட்டும் வேலை முற்றுப் பெறாத நிலையில் தற்போது பெய்த மழை நீர் வெள்ளத்தால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் அனைத்துப் பயன்பாட்டிற்கும் உரியதான நிலையில் இருந்த புதுமுறிப்புப் பாலம் மிகவும் சேதமடைந்த நிலையில் உடையும் அபாய நிலையை எட்டியுள்ளது.

இப் பாலங்கள் அமைந்துள்ள கழிவு வாய்க்கால் கரைச்சிப் பிரதேச செயலக நிதி ஒதுக்கீடு மற்றும் அனர்த்த முகாமைத்துவப்பிரிவு, கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் பங்களிப்புடன் துப்புரவு வேலை நடைபெறத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் உடையும் நிலையிலுள்ள இப் பாலத்தில் அனர்த்தங்கள் ஏற்படுமாகில் விவசாயிகள் , மாணவர்கள் ஆகியோர் பாதிக்கப்படுவர். எனவே உடனடியாக விசேட நிதி ஒதுக்கீட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒதுக்குவதுடன் பாலம் சேதமடைவதற்கு முன்னர் நடவடிக்கை எடுத்து பாதுகாக்க வேண்டுமென பொது மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.(2-254)

# புரட்சித் தலைவரை இழந்த சோகத்தில் உறைந்து போனது கியூபா

(அஜர்பையான் )

பனிப்போரின் மூலமாக கியூப அரசியலை மாற்றுப் பாதைக்கு கொண்டுசென்ற புரட்சித் தலைவர் பிடல் காஸ்ட்ரோவின் மறைவை தொடர்ந்து அந்த நாடு பூரண அமைதியை கடைப்பிடித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் பிடல் காஸ்ட்ரோ காலமான செய்தி தற்போதைய கியூப ஜனாதிபதியும் பிடலின் சகோதரருமான ராவுல் காஸ்ரோவினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை தமது புரட்சித் தலைவனை இழந்த சோகத்தில் கியூபா ஆழ்ந்திருந்தது.


இதன் காரணமாக எங்கும் ஒரு நிசப்த நிலை தென்பட்டதாக றொய்ட்டர்ஸ் செய்தித் சேவை அறிக்கையிட்டுள்ளது.

இதன் காரணமாக மதுக்கடைகள் அனைத்தும் மூடப்பட்டு தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு, அனைத்து கொண்டாட்டங்கள் மற்றும் விழாக்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக ஹவானா புரட்சி சதுக்கத்தில் இருந்து மாபெரும் இராட்சதப் பேரணிகள் நடத்தப்படுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கம்யூனிஸ்ட் நாடானா கியூபாவின் உத்தியோகபூர்வ பத்திரிகையான ஹிரண்மா நேற்று வழமைக்கு மாறாக கறுப்பு நிறத்தில் தனது பத்திரிகையை பிரசுரித்துள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் டிசெம்பர் 4ஆம் திகதி பிடல் காஸ்ரோவின் இறுதிச் சடங்குகள் இடம்பெற உள்ளதுடன், அவரது உடல் சாம்பலை கியூபா முழுவதும் தூவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# சோமாலிய தலைநகரில் கார்க்குண்டு தாக்குதல்

## 10 பேர் பலி

சோமாலிய தலைநகர் மொகாடிசுவில் அமைந்துள்ள சந்தையொன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

குறித்த தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதலானது சனநெரிசல் மிக்க சந்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளதுடன், அதன் காரணமாக பொதுமக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலானது நேற்று முன்தினம் நண்பகல் வேளையில் இடம்பெற்றுள்ளதாகவும் மேலும் இச்சந்தையானது தலைநகரின் மிகப் பெரிய சந்தை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இச் சந்தையானது தலைநகரின் பிறபகுதிகள் உட்பட நாடு முழுவதற்குமான மரக்கறிகள் மற்றும் ஏனைய பொருட்களின் விநியோக பகுதியாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இரசாயன ஆயுதங்கள் மூலம் ஐ.எஸ்.தீவிரவாதிகள் தாக்குதல்

## இராணுவம் பரபரப்பு குற்றச்சாட்டு

(அங்காரா)

**சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் உள்ள பகுதிகளை மீட்பதற்காக சண்டையிட்டுவரும் போராளிகள் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் இரசாயன ஆயுதங்களை வீசித்தாக்குதல் நடத்தியதாக துருக்கி நாட்டு இராணுவம் குற்றம்சாட்டியுள்ளது.**

துருக்கி-சிரியா எல்லைப் பகுதியில் அலெப்போ நகரை ஒட்டி, அல் பாப் பகுதியில் குவாபாசிப் என்னும் சிரியாவுக்கு சொந்தமான நக ரத்தை கைப்பற்றி இருந்த ஐ.எஸ். தீவிரவாதிகள், அங்கிருந்தவாறு துருக்கி நாட் டிலும் ஆதிக்கம் செலுத்த முயற்சித்து வந்தனர்.

அல் பாப் நகரத்தை மீட்பதற்காகவும், ஐ.எஸ். தீவிரவாதிகளை இங்கிருந்து விரட்டுவதற்காகவும் சிரியாவில் உள்ள அஹ்ரார் அல்ஷாம் உள்ளிட்ட உள்நாட்டு குர்திஷ் இனப்போராளிக் குழுக்கள் அண்மையில் அதிரடி தாக்குதலை தொடங்கின.

துருக்கி இராணுவமும் அவர்களுக்கு துணையாக இருந்து வருகிறது. இந்நிலையில், அல் பாப் நகரில் உள்ள ஹலிலியே என்ற இடத்தில் சண்டையிட்டு வரும் துருக்கியை சேர்ந்த போராளி குழுக்களின் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள்இரசாயன ஆயுதங்களை வீசிதாக்குதல்நடத்தியதாக துருக்கி நாட்டு இராணுவம் குற்றம்சாட்டியுள்ளது.

இந்த தாக்குதலால் துருக்கியை சேர்ந்த 22 போராளிகள கண்ணரிச்சல் மற்றும் தோலதடிமனால் பாதிக்கப்பட்டுள்ளதாக துருக்கி இராணுவ அதிகாரிகள்தெரிவித்துள்ளனர். (இ-7)

# செவ்வாயில் தண்ணீர் நாசா கண்டுபிடித்தது

(வோஷிங்டன்)

செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருப்பதாக "நாசா" விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சூரிய குடும்பத்தில் உள்ள சிவப்பு கோளான செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழ்வதற்கு தேவையான சூழல் உள்ளதா என்பதை ஆராய்ச்சி செய்யும் பணியில் சில நாடுகள் ஈடுபட்டு வருகின்றன.

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையம்(நாசா) இதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இது செவ்வாய்க்கு அனுப்பிய விண்கலத்தில் இருந்து வரும் தகவல்களை ஆய்வு செய்கிறது.

இந்நிலையில், செவ்வாயில் உடோபியா பிளனிசியா பகுதியில் தண்ணீர் இருந்ததற்கான ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

10 மீற்றர் தடிமனில் மணல் ஈரப்பகுதி உள்ளதாகவும், அது 12,100 கன கி.மீ., பரப்பளவுக்கு உள்ளதாகவும் "நாசா" விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த பரப்பளவு அமெரிக்காவின் சுப்பீரியர் ஏரியின் பரப்பளவை விட பெரியது எனவும் கணிக்கப்பட்டுள்ளது.இந்தியாவும் செவ்வாய் ஆராய்ச்சிக்கென "மங்கள்யான்" விண்கலத்தை அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)




# மறு வாக்கு எண்ணிக்கை மோசடி டொனால்ட் ட்ரம்ப் ஆவேசம்

தேர்தல் முடிந்த நிலையில மறுவாக்கு எண்ணிக்கை என்பது ஒரு 'மோசடி என டொனால்ட் ட்ரம்ப் ஆவேசமாக கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடந்தது. அதில் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் எதிர்பாராத வகையில் வெற்றி பெற்றார். இவர் ஹிலாரி கிளின்டனை விட மக்கள் வாக்கு எனப்படும் பாப்புலர் வாக்குகளை குறைவாக பெற்றுள்ளார்.

அமெரிக்க முறைப்படி ஜனாதிபதியின் வெற்றியை தேர்வாளர் வாக்குகள் தான் நிர்ணயிக்கும். அந்த வகையில் ஹிலாரியை விட ட்ரம்ப் கூடுதல் தேர்வாளர்களை பெற்று வெற்றி பெற்றார்.


இதற்கிடையே விஸ்கானசின், மிச்சிகன் மற்றும் பென்சில்வேனியா மாகாணங்களில் ஹிலாரி வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மாறாக அங்கு ட்ரம்ப் வென்றார்.

எனவே அங்கு முறைகேடு நடந்ததாக கூறி தேர்தலில் போட்டியிட்ட கிரீன் கட்சி வேட்பாளர் ஜில் ஸ்பெயின் விஸ்கான்சின் மாகாணத்தில் மறுவாக்கு எண்ணிக்கை நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் மனு செய்துள்ளார்.

அதேபோன்று மிச்சிகன், பென்சில்வேனியாவிலும் மறுவாக்கு எண்ணிக்கைக்கு மனு செய்ய இருப்பதாகவும் அறிவித்துள்ளார். இதற்கிடையே கிரீன் கட்சி வேட்பாளரின் கோரிக்கையை ஹிலாரி கிளின்டன் தரப்பும் ஆதரித்துள்ளது. அது குறித்து ஹிலாரியின் பிரசார குழுவை சேர்ந்த மார்க் இலைஸ் கூறும்போது, "தேர்தல் முடிவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

அதற்கு டிரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். கிரீன் கட்சி வேட்பாளர் மறுவாக்கு எண்ணிக்கைக்கு மனு செய்தது தேவையற்றது. இது ஒரு வகை மோசடியாகும்.

தேர்தல் முடிவு மக்களால ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தேர்தல் முடிந்து விட்ட நிலையில் இத்தகைய கோரிக்கை தேவையற்றது என தெரிவித்துள்ளார். (இ-7)



# கியூபாவின் புரட்சித் தலைவரை சர்வாதிகாரி என விளித்தார் ட்ரம்ப்

உலகத்தையே சோகத்தில் ஆழ்த்திய கியூபாவின் புரட்சித் தலைவன் என வர்ணிக்கப்படும் பிடல் காஸ்ட்ரோ காலமானார்.

அவரது மறைவு அறிவிக்கப்பட்டது முதல் பல வேறு நாடுகளிலும் இருந்து இரங்கல் செய்திகள் வெளியாகிய வண்ணம் உள்ளன.

இந்த நிலையில், அமெரிகக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் டரம்ப், பிடெல் காஸ்ட்ரோவை 'கொடூரமான சர்வாதிகாரி' என விளித்துள்ளார்.

இது தற்போது சர்வதேச அளவில் சர்ச்சையை தோற்றுவிததுள்ளது. மேலும் கியூபா தனது எதிர்காலத்தை சுதந்திரமாக முற்கொண்டு செலல முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1959 ஆம் ஆண்டு முதல் கியூபாவில் ஆட்சி அதிகாரத்தை பெற்றிருந்த காஸ்ட்ரோ அமெரிக்கா முற்றிலும் எதிர்க்கும் கம்யூனிஸ்ட் ஆட்சியை முன்னெடுத்திருந்தார்.

இதேவேளை, அமெரிக்காவுடன் பல தசாப்தங்களாக முறுகல்நிலையையே கியூபா கொண்டிருந்த நிலையில் அண்மையில் ஒபாமாவின் ஆட்சியின் கீழ் கியூபாவுடனான உறவை அமெரிக்கா ஓரளவிற்கு சீர்செய்திருந்தது.

இருப்பினும் 45ஆவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ட்ரம்ப் தனது தேர்தல பிரசார காலத்தின் போதே கியூபாவுடனான உறவுதொடர்பில் பெரும் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

எவ்வாறான போதும், பலகோடி மக்களால் தலைவராக கொண்டாடப்படும் ஒருவர் காலமான நிலையில், அவர் தொடர்பில் எதிர்மறை கருத்தொன்றை உலக வலலரசின் வருங்கால ஜனாதிபதி ஒருவர் தெரிவித்திருப்பது உலக நாடுகளிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

# வல்லரசுகளால் வீழ்த்த முடியாத புரட்சியாளன் பிடல் காஸ்ட்ரோ

இரண்டாம் உலகப்போருக்குப் பின் உலகின் பல்வேறு பகுதிகளிலும் கோலோச்ச முடிந்த அமெரிக்காவால், தனது காலடியில் இருக்கும் ஒரு சிறிய நாடான கியூபாவில் சிறு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை எனில் அது பிடல் காஸ்ட்ரோவின் தலைமைப் பதவியினாலும் அவர் தலைமை தாங்கி வழி நடத்தும் குணத்தினாலுமே என்பதில் ஐயமில்லை.

அத்தகைய கியூபாவின் வளங்கள் அனைத்தும் கியூபா மக்களுக்கே சொந்தம் என அறிவித்து, கியூபாவின் வளர்ச்சிக்கும், பெண்களின் முன்னேற்றத்துக்கும் பாடுபட்டவர் பிடல் காஸ்ட்ரோ.

பிடல் காஸ்ட்ரோ (Fidel Alejandro Castro Ruz ஒகஸ்ட் 13, 1926 - நவம்பர் 25, 2016) கியூபாவைச் சேர்ந்த பொதுவுடைமைப் புரட்சியாளரும் பொதுவுடைமை அரசியல்வாதியும் ஆவார்.

கியூபாவில் 1959 இல் புரட்சியை வழிநடத்தி புல்ஜென்சியோ பாட்டிஸ்ட்டாவின் அரசை வீழ்த்தி தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்ற காஸ்ட்ரோ, 1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும், 1976 முதல் 2008 வரை ஜனாதிபதியாகவும் பொறுப்பு வகித்தார்.

கியூபாவின் பொதுவுடைமைக் கட்சியின் முதல் செயலாளராக 1965 இல் பதவியேற்ற இவர் கியூபாவை ஒற்றைக் கட்சி சமூகவுடைமைக் குடியரசாக்கினார்.

49 ஆண்டுகள் கியூபாவை ஆண்ட பிடல் காஸ்ட்ரோ பெப்ரவரி 24 ஆம் திகதி 2008 அன்று பதவியிலிருந்து விலகினார்.

உலகத்தில் நீண்ட காலத்துக்கு தலைமைப் பொறுப்பில் இருந்த தலைவர் பிடல் காஸ்ட்ரோ மட்டுமே.

சர்வதேச அளவில், காஸ்ட்ரோ 1979இல் இருந்து 1983 வரை மற்றும் 2006 முதல் 2008 வரை, அணிசேரா இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்துள்ளார்.

அமெரிக்காவில் இருந்து 93 மைல் தூரத்தில் இருந்தாலும் கியூபாவை ஒரு சோசலிச நாடாகப் பேணிய பெருமை இவரைச் சாரும்.

**குழந்தைப் பருவமும் கல்வியும்**

1926 ஒகஸ்ட் 13 - கியூபாவில் பிரான் அருகில் ஒரு கரும்புத் தோட்டத்தில் பிடல் காஸ்ட்ரோ பிறந்தார்.



காஸ்ட்ரோவின் தந்தை ஏன்ஜல் காஸ்ட்ரோ ஆவார். காஸ்ட்ரோ குடும்பம் மிகவும் நடுத்தர குடும்பம் ஆகும்.

ஏன்ஜல் காஸ்ட்ரோ ஒரு பண்ணையார் ஆவார். ஏன்ஜல் காஸ்ட்ரோ ஸ்பெயினில் இருந்து கியூபாவுக்கு பிழைக்க வந்தார்.

அவர் கியூபாவின் ஓரியன்ட் மாகாணத்தில் குடியேறினார். ஏன்ஜல் காஸ்ட்ரோ கடுமையாக உழைத்து ஒரு பண்ணையார் ஆனார். அவரின் கீழ் ஆயிரக்கணக்கான கியூபர்கள் வேலை பார்த்தார்கள். 1940 ஏக்கர் நிலத்திற்கு உரிமையாளர் ஆனார் ஏன்ஜல்..

1930 இல் கியூபாவில் பொருளாதார நெருக்கடி காரணமாக காஸ்ட்ரோ தமது ஐந்து வயதில், சான்டியாகோ டி-க்யூபா சென்றார்.

ஏஞ்ஜலின் குடும்ப நண்பர் வீட்டிற்கு காஸ்ட்ரோவும் அவரது சகோதர சகோதரிகளும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஏஞ்ஜலின் குடும்ப நண்பர் ஒரு ஆசிரியர். ஆனால் மிகவும் ஏழை.

அதனால்ஏன்ஜல்குழந்தைகளுக்கு அனுப்பும் பணத்தை அந்த முழுக் குடும்பமும் பகிர்ந்துகொண்டது.

இதனால் காஸ்ட்ரோவின் சகோதரிகள் அனைவரும் வீடு திரும்பி விட்டனர்.

ஆனால் காஸ்ட்ரோ மட்டும் அங்கேயே தங்கி படிப்பைத் தொடங்கினார்.

சான்டியாகோ டி-கியூபாவில் லாசேல் எனும் பாடசாலையில் காஸ்ரோ படித்தார்.

பின் காஸ்ட்ரோ டோலோரஸ் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். 1941 இல் காஸ்ட்ரோ பெலன் கல்லூரியில் சேர்ந்தார்.

காஸ்ட்ரோ 1945 இல் ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார்.

இங்குதான் காஸ்ட்ரோ கம்யூனிசவாதியாகப் பரிமாணம் பெற்றார்.

**முதல் அரசியல்**

காஸ்ட்ரோ, ஹவானா பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பிறகு சிறிது சிறிதாக அரசியலால் ஈர்க்கப்பட்டார்.

காஸ்ட்ரோ கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்தார். முதல் வருடமே பிரசாரத்திலெல்லாம் ஈடுபட்டு வெற்றி பெற்றார்.

போராட்டங்களும் செய்தார். பேச்சுத் திறமையால் பிடல் மக்களைக் கவர்ந்தார்.

1952 இல் அமெரிக்காவின் கைப்பாவையான பாடிஸ்டா, கியூபாவின் ஆட்சியை கைப்பற்றினார்.

அப்போது "குற்றம் சாட்டுகிறேன்" என்னும் பத்திரிகையை ஆரம்பித்த காஸ்ட்ரோ, பாடிஸ்டா அரசின் தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்தவும், புரட்சிக்கு மக்களை அணிதிரட்டும் நடவடிக்கையிலும் ஈடுபட்டார்.

**காஸ்ட்ரோவின் முதல் தாக்குதல்**

ஜூலை 26, 1953 இல் மொன்காடாத் இராணுவ முகாமின் மீது தாக்குதல் நடத்தினார்.

அது தோல்வியிலேயே முடிந்தது மட்டுமன்றி காஸ்ட்ரோவும் கைது செய்யப்பட்டார்.

1953 இல் காஸ்ட்ரோவின் வழக்கு நீதி விசாரணைக்கு வந்தது.

காஸ்ட்ரோ புரட்சிக்கு திட்டம் தீட்டியதை ஒப்புக் கொண்டார்.

வாதிடும்போது "என் மீது குற்றமில்லை என்பதை வரலாறு கூறும்" என்ற புகழ் பெற்ற முழக்கத்தை எழுப்பினார்

நீதிமன்றத்தில் பிடல் நிகழ்த்திய இந்த உரையே பினனாளில்"வரலாறு என்னை விடுதலை செய்யும்" (THE HISTORY WILL ABSOLVE ME) என்று வெளிவந்த நூலாகும்.

பின் மே 15, 1955 இல் காஸ்ட்ரோ விடுதலை செய்யப்பட்டார்.

பின்னர் மெக்சிக்கோ சென்ற காஸ்ட்ரோ கொரில்லா முறை தாக்குதல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

**காஸ்ட்ரோவும் சேவும்**

மெக்சிக்கோவில்காஸ்ட்ரோ இருக்கும் போதுதான் அவருக்குத் தேச எல்லைகடந்த மனிதநேயப் போராளியான சேகுவேரா அறிமுகம் ஆனார்.

ஸ்பெயின் நாட்டின் குடியேற்ற நாடாக இருந்த கியூபாவில் இருந்து அமெரிக்காவின் ஆதரவு பெற்ற பாடிஸ்டாவின் ஆட்சியை அகற்றுவதற்கு வழக்கறிஞரான பிடல் காஸ்ட்ரோவும், ஆர்ஜென்டினாவின் மருத்துவரான சேகுவேராவும் இணைந்து மக்களைத் திரட்டிச் செய்த புரட்சியே காரணமாகும்.

அவர் கியூப விடுதலைப் போராட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

காஸ்ட்ரோவும் சேகுவேராவும் க்ரான்மா எனும் கள்ளத்தோணி மூலம் கியூபா வந்தடைந்தனர்.

அடர்த்தியான மரங்கள் நிறைந்த சியார்ரா மேஸ்தாரவில் தங்கியிருந்தபடியே கியூப விவசாயிகளையும், இளைஞர்களையும் புரட்சிக்கு தயார்படுத்தினார்.

பின் படிப்படியாக முன்னேறி கியூபாவில் காஸ்ட்ரோ தலைமையிலான சோசலிச குடியரசை நிறுவினர்.

பிற்காலத்தில் காஸ்ட்ரோவுக்கு எதிராக வரிந்து கட்டிய அமெரிக்காதான், காஸ்ட்ரோ தலைமையிலான புதிய அரசை முதல்முறையாக அங்கீகரித்தது.

கியூபாவில் ஜனநாயகத்தைக் கொண்டு வருவேன் என்ற பிடல் காஸ்ட்ரோவின் வாககுறுதியை நம்பி அவரை அங்கீகரித்த அமெரிக்கா, அவர் கம்யூனிசத்தின் பக்கம் சாய்ந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தது.

**காஸ்ட்ரோவும் அமெரிக்காவும்**

அமெரிக்காவுக்கே சவால் விட்டது, நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலங்களைப் பறித்தது, அமெரிக்க வன்முறைக்கும்பல்கள், கேளிக்கை மைதானங்களை ஒழித்தது போன்ற காஸ்ட்ரோவின் அதிரடி நடவடிக்கைகள் மக்களைக் கவர்ந்தன.

இதனால் அவருக்கு மக்களிடையே ஆதரவு பெருகியது.

எனினும், பிடல் காஸ்ட்ரோவை ஆட்சியிலிருந்து அகற்ற முடிவு செய்த அமெரிக்க அரசு, கியூபா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது.

மேலும், உணவு, மருந்துகள் தவிர அனைத்து பொருட்களையும் கியூபாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அமெரிக்கா 1961 ஆம் ஆண்டு தடை விதித்தது.

இதற்குப் பதிலடியாக, கியூபாவை கம்யூனிஸ்ட் நாடாக பிடல் காஸ்ட்ரோ அறிவித்தார்.

அடுத்த நாளே, 1,400 கியூபா கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி, அந்த நாட்டின் "பே ஆஃப் பிக்" தீவுக்கு அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ. அனுப்பி வைத்தது.

எனினும் அந்தத் தீவை ஆக்கிரமிக்கும் முயற்சி, பிடல் காஸ்ட்ரோவின் படையினரால் முறியடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கியூபாவை ஆக்கிரமிக்கும் எண்ணத்தைக் கைவிட்ட அமெரிக்கா, கியூபா கிளர்ச்சியாளர்களைப் பயன்படுத்தி பிடல் காஸ்ட்ரோவைப் படுகொலை செய்ய தொடர்ந்து முயற்சி செய்து வந்தது.

காஸ்ட்ரோவின் ஆட்சியின்கீழ் கியூபா வந்ததும் அமெரிக்கா அவரைத் தன் வசம் இழுக்க முயற்சித்தது.

ஆனால்அதற்கு காஸ்ட்ரோ மறுத்து, "கியூப வளங்கள் கியூப மக்களுக்கே சொந்தம்" என்று கூறிவிட்டார்.

அதனால் அமெரிக்கா கியூபா மீது பொருளாதாரத் தடையை விதித்தாலும் காஸ்ட்ரோ அதனைச் சமாளித்தார்.

அமெரிக்கா தனது சி.ஐ.ஏ அமைப்பின் மூலம் காஸ்ட்ரோவை 638 முறை கொல்லத் திட்டம் தீட்டியும் அதன் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

**காஸ்ட்ரோவின் ஆட்சியில் கியூபா**

கியூபாவில் அனைவருக்கும் இலவசக் கல்வியை காஸ்ட்ரோ அறிமுகப்படுத்தினார்.

1995 ஆம் ஆண்டின் யுனெஸ்கோ ஆய்வின்படி கியூபாவில் கல்வியறிவு சதவிகிதம் 96 ஆகும்.

மேலும் கியூபாவின் தொழில் நுட்பத்துறையில் பணிபுரிபவர்களில் 60 சதவிகிதத்தினர் பெண்கள் ஆவர்.



மருத்துவ துறையிலும் கியூபர்கள் சிறந்து விளங்கினர்.


மகப்பேற்றின் போது தாய்மார்களின் இறப்பு விகிதம் உலகிலேயே மிகக் குறைவானது.

அமெரிக்காவின் ஆதிக்கத்தை எதிர்த்து புரட்சிகள் பல செய்த பிடல் காஸ்ட்ரோ உலக மக்கள் அனைவராலும் என்றும் போற்றப்படுவார்.

தொகுப்பு:- சிந்துஜா

# மாவீரர் நாளும் தலைவர் பி





















தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 62 ஆவது பிறந்த நாளும் மாவீரர் நாள் நிகழ்வுகளும் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் பெரும் எழுச்சியுடன் இடம்பெற்றன. விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு வாழ்த்து தெரிவித்து பொது இடங்கள், வீடுகள் என அனைத்து இடங்களிலும் கேக் வெட்டிக் கொண்டாடியுமுள்ளனர். வலைத் தளங்களிலும் பிறந்த நாள் வாழ்த்துக்கள் குவிந்து கொண்டே உள்ளன.

இந்தியா மற்றும் உலக நாடுகளைச் சேர்ந்த பிரபலங்களும் டுவிட்டர் , பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்கள் ஊடாக வாழ்த்துக்களை தெரிவித்தும் வருகின்றனர்.


இதேபோன்று மாவீரர்கள் நினைவாக இரத்ததானம், மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு, எழுச்சிப் பாடல்கள் வெளியீடு போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.


நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தாயகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் பெரும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுள்ளன.


கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்கள் பொது மக்களின் பங்கேற்புடன் சிரமதானம், துப்புரவு செய்யப்பட்டு நேற்று மாலை 6.05 மணியளவில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. முன்னதாக நேற்று முற்பகல் 10 மணியளவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோரின் ஏற்பாட்டில் நல்லூரில் இடிக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி முன்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது. புலத்திலும், லண்டன் , பிரான்ஸ், ஜேர்மன், சுவிஸ் , டென் மார்க், கனடா போன்ற நாடுகளிலும் மாவீரர் தினம் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப் பட்டுள்ளது. இதேவேளை யாழ். பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கைலாசபதி கலையரங்கில் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

மான
செலுத்
சுற்றியு
முன்தி
பல்கலை
25.1
மாணவ
மண்டப
நினைவ
தமிழீழ
ஒலிக்க
இதே
நிகழ்வு
லண்டன
போரில்
யோர் அ
அது
ஜேர்மன
நடத்திய
இல்லம்
பிரா
பிரான்
படுகொ

# பிரபாவின் பிறந்தநாளும்




















மாணவர்கள் அனைவரும் மாவீரர்கள் நினைவாக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். பல்கலை வளாகத்தில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியை சுற்றியும் மாவீரர்கள் நினைவாக மரங்கள் நாட்டியிருந்தார்கள். இதேவேளை நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனது 62 ஆவது பிறந்த தினமும் பல்கலைக்கழகத்தில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

25.11.2016 அன்று டென்மார்க் ஒகூஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களால் மாவீரர் நாள் வணக்க நிகழ்வு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் நடத்தப்பட்டுள்ளது. நாட்டிற்காக தமது உயிரை துறந்த தேசப்புதல்வர்களை நினைவு கூர்ந்து பொதுச்சுடர் ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடி ஏற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது . மாவீரர் துயிலுமில்லப்பாடல் ஒலிக்கப்பட்டது. மாவீரர்களுக்கு ஈகச்சுடர், மலர் வணக்கம் செலுத்தப்பட்டது .

இதேவேளை தமிழ் இளையோர் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட மாவீரர் வார நிகழ்வுகள் பல நாட்டின் பல்கலைக்கழகங்களில் நடந்தேறிவருகின்றன. அதேபோல லண்டன் UCL பல்கலைக்கழகத்தில் கடந்த புதன்கிழமை மாலை தாயக மண்மீட்பு போரில் உயிர்நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. பிரித்தானிய இளையோர் அமைப்பும் லண்டன் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து முன்னெடுத்தனர்.

அதுமட்டுமின்றி மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமிழ் இளையோர் அமைப்பு ஜேர்மனியில் லுட்விக்ஸ்புர்க் (Ludwigsburg) நகரில் ஒரு ஓவியப்போட்டி நடத்தியுள்ளது. இளையோர்கள் மாவீரர் நினைவாக கார்த்திகைபூக்கள், துயிலும் இல்லம் போன்ற ஓவியங்கள் வரைந்தனர்.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் பிரான்ஸ் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. ஆரம்பநிகழ்வுகள் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் நினைவாக கிளிச்சியில் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் இடம்பெற்றன. அங்கே கிளிச்சி மாநகரசபை உறுப்பினர்களால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அங்கிருந்து முழவு வாத்திய அணிவகுப்பு மதிப்பளித்தலுடன் மண்டபம் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டனர்.

கனடா, ரொறன்ரோவில் உள்ள றயர்சன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களால் மாவீரர் நாள் வணக்க நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் நவம்பர் 27ஆம் திகதி வரும் மாவீரர் நாளுக்கு முன்னதாக கனேடிய பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் மாவீரர் வணக்க நிகழ்வுகள் தமிழ் மாணவர்களால் நடத்தப்படுவது வழக்கம். இதனை கனடா தமிழ் இளையோர் அமைப்பு ஒருங்கமைத்து வருகின்றது. அந்த வகையில், றயர சன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த மாவீரர் நாள் வணக்க நிகழ்வில், மாவீரர் கள் பற்றிய எழுச்சி உரைகள், கவிதைகள் என பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மனிதாபிமானம், ஈகம் நிறைந்த விடுதலைப்போராட்டத்தின் வரலாற்றை எடுத்துரைக்கும் புலம்பெயர் தமிழ் இளையோர்கள் மாவீரர் வாரத்தை (21.11.2016-27.11.2016) முன்னிட்டு தமிழ்த் தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்திற்காக களமாடி தம்முயிரை ஈகம் செய்த மாவீரர்களது உன்னத தியாகங்களையும், அவர்களின் அர்ப்பணிப்பையும் பறைசாற்றும் விதமாகவும் ஜேர்மனியில் பல்வேறு நகரங்களில் தமிழ் இளையோர் அமைப்பு - ஜேர்மனியின் ஏற்பாட்டில் மனிதநேய செயற்பாடுகளும், வணக்க நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. அதேபோல் ஜேர்மனியின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர் நாளும் தலைவர் பிரபாவின் பிறந்தநாள் நிகழ்வும் இடம்பெற்றன.

(தொகுப்பு:-உ.சாளின்)

# கோப் குழுவை கலைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)


பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற குழுவான கோப் குழுவை கலைத்துவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரசாரம் பிரதியமைச்சர் ஒருவரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மேலும், இதற்காக இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள மத்தியில் கையொப்பங்களும் திரட்டப்படுகின்றன. (இ-7)

# ரணிலின் நடவடிக்கையில் டிலானுக்குச் சந்தேகம்



(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சியினருக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் கூடுதல் கவனிப்பு வழங்குவதனை இந்த பாராளுமன்றத்தில் கண்டுகொள்ள முடிகிறது. இதனால் பிரதமரின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்படுவதாக இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

கூட்டரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கூறுவதை செவிமடுப்பதை விடவும், கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாய் திறந்தவுடன் அவற்றுக்கு பதிலளிக்கின்ற ஒரு நிலைமையை காணமுடிகின்றது எனவும் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டினார்.

பிரதமரின் நடவடிக்கைகளும் இதற்கு எந்தவிதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாதுள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்தார். (இ-7)

# நிதியமைச்சரின் யோசனையை நீதியமைச்சர் எதிர்க்கிறார்





நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் யோசனையை எதிர்ப்பதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதிமன்றில் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்வதற்கு கட்டணம் அறவீடு செய்யும் நிதி அமைச்சரின் யோசனை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை முற்று முழுதாக நிராகரிப்பதாக வார இறுதி பத்திரிகையொன்றுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

நீதியை நிலைநாட்டிக் கொள்ளும் நோக்கில் நீதிமன்றம் செல்லும் மக்களிடம் பணம் அறவீடு செய்வது நியாயமற்ற செயலாகும்.

இந்த விடயம் குறித்து நிதி அமைச்சரிடம் நான் தெளிவு படுத்தியுள்ளேன். ஜனநாயக நாடு ஒன்றில் பொதுமக்கள் நீதியின் துணையை நாடுவதற்கான உரிமை இந்த நடைமுறையின் மூலம் வரையறுக்கப்படக் கூடும்.

இந்த யோசனை தொடர்பில் சட்டத்தரணிகளுக்கு இதுவரையில் போதியளவு தெளிவு கிடைக்கவில்லை.

அவ்வாறு தெளிவடைந்தால் இந்த யோசனைக்கு கடுமையான எதிர்ப்பு வெளியிடப்படக்கூடும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.(இ-7)

# வெற்றிக் கட்சியாக சு.கவை மாற்றுவேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிக் கட்சியாக மாற்றுவதற்கு தயார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசி வரலாற்றுக் காலம் முதல் சவால்களை வெற்றிகொண்ட ஓர் கட்சியாகும்.

எதிர்காலத்திலும் இந்த நிலையில் மாற்றமிருக்காது. எதிர்வரும் ஆண்டு நடுப்பகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது சுதந்திரக் கட்சியை வெற்றிக் கட்சியாக மாற்றும் பொறுப்பினை நான் ஏற்றுக்கொள்ளப் போகின்றேன்.

இந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கை சின்னத்தில் போட்டியிடும். நாட்டின் அனைத்து இடதுசாரி முற்போக்குக் கட்சிகளையும் ஒன்றிணைத்து கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

சாதாரண பொதுமக்களுக்கு நலன்களை வழங்கும் கட்சியாக சுதந்திரக் கட்சி செயற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இடது பக்கத்தால் முந்திச் செல்வதற்கான தண்டப்பணத்தை மாற்ற அரசு இணக்கம்

இடது பக்கத்தால் முந்திச் சென்று பாதை ஒழுங்குகளை மீறும் வாகனங்களுக்கு விதிக்கப்படவுள்ள 25 ஆயிரம் ரூபா தண்டப்பணச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் கொழும்பில் நிதி அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக்வும் அமைச்சர் தெரிவித்தார்.

இடது பக்கத்தால் முந்திச் செல்லல் உட்பட 7 போக்குவரத்துக் குற்றச்செயல்களுக்கான தண்டப் பணத்தை அதிகரிக்கும் பிரேரணைகள் வரவு செலவுத்திட்ட யோசனையில் அரசாங்கம் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பிறரைப் பேச விடக்கூடாத சந்தர்ப்பங்கள்

நம் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவர்கள் நம்மைத் திட்டினால் அதைத் தாங்கிக் கொள்வது சற்றுக் கடினம் தான். முன்பின் தெரியாதவர்கள் கடிந்து கொண்டாலோ தூசி தட்டுவது போல் தட்டிவிட்டுப் போய்விடலாம்.

எனவே இதமான இளகிய மனம் கொண்டவர்கள் முடிந்தவரை பிறரிடம் பேச்சுக் கேட்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

சில பேர் இருக்கிறார்கள். குறிப்பாகப் பெண்கள், இவர்கள் ஒரு சொல் தாங்க மாட்டார்கள். ஆனால் அந்தச் சொல் தங்களைத் தாக்கும் வரை சும்மா இருக்க மாட்டார்கள்.. வீணாகச் சம்பந்தப்படடவர்களின் வாயைக் கிளறியபடி இருப்பார்கள்.

மென்மையான இதயம் கொண்ட இவர்கள், பிறரைக் குறை கூறும் விவாதத்திலோ , தான் செய்தது தவறே இல்லை எனும் விவாதத்திலோ தீவிரமாக இறங்குவர். பெரும்பாலும் இவர்களது அழுகையுடன் அல்லது மனப் புண்ணை ஏற்படுத்திக் கொண்டவுடன் தான் முற்றுப் பெறும்.

இவர்கள் நடந்த சம்பவத்தை நினைத்து நினைத்தும், திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்தி பார்த்தும் வேதனை அடைவார்கள். இவர்களது செயலுக்கும் பாம்புப் புற்றுக்குள் கையை விடுபவர்களுக்கும் அதிக வேறுபாடு இல்லை.

மனம் சங்கடப்படும்படி ஒன்றைப் பிறர் நம்மை நோக்கிச் சொல்லிவிடுவார்களோ என்று எண்ணும்படியான சூழ்நிலை உருவாகும் போது நாம் அமைதியாகிவிட வேண்டும்.

நிச்சயம் நம்மை ஒரு வாங்குவாங்கப் போகிறார்கள் என்று தெரிந்துவிட்டாலோ,உடனே எதுவும் சொல்லி விடாதீங்க – நீங்க எதுவும் சொன்னா எனக்கு மனசு தாங்காது என்கிற பாணியில் ஏதேனும் சொல்லி அந்த எரிமலை வாயை இதமான வார்த்தைகளால் குளிரச் செய்ய வேண்டும்.

நீங்க இவ்வளவு பொறுமையாய் இருந்ததே பெரிய விடயம். உங்களை ரொம்பவும் சோதிச்சுட்டேன் இல்லே! என்கிற பாணியில் அவர்கள் நம்மைப் பற்றி எண்ணுவதை அனுமானித்து நாமே முன் கூட்டிச் சொல்லிவிட வேண்டும்.

அடிக்கடி கோபிக்கும் மனிதரைக் கணவராகப் பெற்றவர்கள், ஏங்க, தயவு செய்து எல்லாரையும் வச்சுக்கிட்டு இப்படிப் பேசாதீங்க! என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஒருவரை இலேசாக மோதிவிட்டாலோ , காலை மிதித்து விட்டாலோ, முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு சாரி சொல்லக் கூடாது. அந்த சாரிக்குப் பெரும்பாலும் பலன் இருக்காது. மிதிக்கிறதையும் மிதிச்சிட்டு, சாரி வேறே! என்று அவர் எரிச்சலடைவாரே தவிர சமாதானமாக மாட்டார். ஒரு இலேசான புன்னகையுடன் அசட்டுச் சிரிப்பு அதே சாரியைச் சொல்லிப் பாருங்கள். அத்தோடு விடயம் முடிந்து விடும்.

ஒரு வழிப் பாதையில் ஏதோ ஒரு வாகனத்தில் தவறான திசையில் வருகிறீர்கள். பொலிஸ்காரர் பார்த்துவிட்டார். அரண்டுமிரண்டு விடாதீர்கள். ஒரு சிறு புன்னகையுடன் சாரி சார், கொஞ்சம் அவசரம் ! என்று சொல்லுங்கள்– மன்னிப்புக் கிடைத்துவிடும்.

முன் பின் தெரியாதவர்களோடு இது போன்ற சிறு சிறு அனுபவங்கள் ஏற்படும் போது புன்னகை புரிந்து சமாளிப்பது என்பது ஒரு கலை. அந்தப் புன்னகை இவரை நமக்கு ஏற்கனவே அறிமுகமோ என்று ஒரு கணம் திகைக்க வைக்கும். இனிய மனிதர் என்கின்ற அபிப்பிராயத்தை உருவாக்கும். அப்புறம் அவர்கள் ஏன் வாயைத் திறக்கப் போகிறார்கள்?


**லேனா தமிழ்வாணன்**

# தென்கொரிய ஜனாதிபதிக்கு எதிராக வரலாறு காணாத மக்கள் போராட்டம்

கடந்த தசாப்தங்களில் இல்லாத அளவிற்கு தென்கொரியாவில் ஜனாதிபதிக்கு எதிராக வலுத்துவரும் போராட்டத்தில் பங்கேற்கும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை தலைநகர் சியோலில் சுமார் 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்ததாகவும் அவர்கள் ஜனாதிபதி பார்க் ஹியூன் - ஹையை பதவிவிலக வேண்டும் என்று கோரியுமே குறித்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் வரலாறு காணாத அளவிற்கு மக்கள் பங்கேற்றமை ஜனாதிபதிக்கு எதிராக அதிகரித்துவிட்ட எதிர்ப்பலைகளை காட்டுவதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.



1987 ஆம் ஆண்டு அந்நாட்டில் நிலவிய இராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிராக சுமார் ஒரு மில்லியன் வரையான மக்கள் பங்கேற்ற நிலையில் அதன் பின்னராக மக்களின் மாபெரும் எழுச்சியாக நேற்று முன்தின போராட்டம் பார்க்கப்படுகின்றது.

மெழுகுவர்த்தி ஏந்தி அமைதியான போராட்டங்களாக உருவெடுத்த ஜனாதிபதி பார்கிற்கு எதிரான போராட்டம் தற்போது மக்கள் எழுச்சி என்று கூறும் அளவிற்கு விஸ்தீரணப்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள ஊடகங்கள், நேற்று முன்தின போராட்டமும் அமைதியான முறையில் எதுவித குழப்பங்களும் இன்றி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளன.

எவ்வாறான போதும், ஊழல் குற்றச்சாட்டில் சிக்கியுள்ள ஜனாதிபதிக்கு எதிர்வரும் 2018ஆம் ஆண்டு வரை பதவிக்காலம் உள்ள போதிலும் அவர் மீதான மக்களின் வெறுப்பு அதிகமாகும் பட்சத்தில் அவர் பதவி விலக நேரிடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# முறைத்துப் பார்த்தால் கண்ணைத் தோண்டுவோம் பாகிஸ்தானுக்கு மனோகர் பரிக்கர் எச்சரிக்கை

(பனாஜி)

இந்தியாவை சீண்டிப் பார்க்க நினைக்கும் எதிரிகளின் கண்களை தோண்டி கையில் கொடுப்போம் என இராணுவ அமைச்சர் மனோகர் பரிக்கர் எச்சரித்துள்ளார்.


கோவா மாநிலம் பனாஜி நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் பேசிய இராணுவ அமைச்சர் மனோகர் பரிக்கர் தெரிவிக்கையில்,

நமது எதிரியை கன்னத்தில் அறைந்த மனிதரை (மோடி) மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி இருக்கிறோம் என்று கோவாவில் வாழும் மக்கள் உலகத்துக்கு தெரிவிக்கலாம்.

அவர்கள் (பாகிஸ்தான்) ஒருமுறை துப்பாக்கியால் சுட்டால், நாம் அவர்கள்மீது இரண்டுமுறை பதிலுக்கு தாக்குவதால் எல்லைப்பகுதியில் கடந்த மூன்றுநாட்களாக துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்திருக்கிறது.

நாம் தகுந்த பதிலடி கொடுத்து வருவதால் தாக்குதலை நிறுத்துமாறு நம்மிடம் அவர்கள் முறையிடுகின்றனர்.

போர் நடத்த வேண்டும் என்ற தேவை நமக்கு இல்லை. ஆனால், நமது நாட்டை யாராவது தீய பார்வையுடன் முறைத்துப் பார்த்தால்,



கண்களை தோண்டி எடுத்து, அவன் கையில் போடும் அளவுக்கான சக்தி நம்மிடம் உள்ளது.


ஒரு முயல் வேட்டைக்கு போவதாக இருந்தாலும் ஒரு புலியை கொல்லப் போவது போல் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று எனது தாயார் என்னிடம் கூறுவார்.

நமது படைகள் எந்த நேரத்திலும், எதையும் சமாளிக்க தயார்நிலையில் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இந்தியாவில் தாக்குதல் நடத்த திட்டமிட்ட

# ஐ.எஸ்.ஆதரவாளர்கள் 67 பேர் இதுவரை கைது

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு



இந்தியாவில் தாக்குதல் நடத்த திட்டமிட்ட ஐ.எஸ். ஆதரவாளர்கள் 67 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மாநில பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர்களின் 3 நாள் மாநாடு தெலுங்கானா மாநில தலைநகர் ஐதராபாத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஆரம்பமாகியது.

குறித்த மாநாட்டில் எல்லை தாண்டிய பயங்கரவாதம், ஊடுருவல், பிரிவினைவாதம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்ட நிலையில், மாநாட்டை ஆரம்பித்து வைத்த உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உரையாற்றினார்.

அப்போது ஐ.எஸ்.தீவிரவாத இயக்கம் உலகை அச்சுறுத்தி வருகிறது. இந்தியாவிற்கும் அவர்கள் பெரும் சவாலாக உள்ளனர்.

நாம் அனைவரும் ஒருங்கிணைந்தால் தீவிரவாதிகளின் சவாலை முறியடிக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நமது நாட்டில் தாக்குதல் நடத்த திட்டமிட்ட ஐ.எஸ் தீவிரவாத ஆதரவாளர்கள் 67 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள் என்பது தெரியவந்துள்ளது.


நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய அரசுடன் மாநில அரசுகள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

அத்தோடு, பிரதமர் மோடி தொலைக்காட்சியில் ரூ 500, 1000 பணத்தாள்கள் செல்லாது என அறிவித்ததால் தீவிரவாதிகள் முடங்கி போயுள்ளனர்.

நக்சலைட்டுகள் மற்றும் அதனைச் சார்ந்த சில அமைப்புகள் பழைய பணத்தாள்களை கொடுத்து புதிய பணத்தாள்களை மாற்ற முயற்சி செய்கின்றனர். நாம் அதனை தடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிடல் காஸ்ட்ரோ மறைவுக்கு இந்திய ஜனாதிபதி இரங்கல்

கியூபா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ மறைவுக்கு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் மோடி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



கியூபாவில் ஏறத்தாழ அரை நூற்றாண்டுகாலம், பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் பதவி வகித்தவர் பிடல் காஸ்ட்ரோ. இவர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அமெரிக்காவிற்கும் கியூபாவிற்கும் நேரடி மோதல்கள் வெடித்தன.

உடல் நலக்குறைவினால் பாதிக்கப்பட்டு இருந்த பிடல் காஸ்ட்ரோ 90 வயதில் காலமானார். காஸ்ட்ரோ உடல் நலக்குறைவால் மரணம் அடைந்ததாக அவரது சகோதரரும் ஜனாதிபதியுமான ராவுல் காஸ்ட்ரோ அறிவித்துள்ளார்.

பிடல் காஸ்ட்ரோவின் மறைவுக்கு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், கியூபாவின் புரட்சிகர தலைவர் மரணம் அடைந்ததற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் மிகச்சிறந்த நண்பர் பிடல் காஸ்ட்ரோ" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பக்கத்தில், '20ஆம் நூற்றாண்டின் தனித்துவம் வாய்ந்த தலைவராக விளங்கியவர் பிடல் காஸ்ட்ரோ. ஒரு உயர்ந்த நண்பரை இழந்து இந்தியா துக்கப்படுகிறது. அவரது மறைவால் துயரப்படும் கியூபா அரசுக்கும் மக்களுக்கும் இநத வேதனையான வேளையில் துணையாக இருப்போம் என தெரிவித்து கொள்கிறேன். பிடல் காஸ்ட்ரோவின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்களும் பிடல் காஸ்ட்ரோ மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். (இ-7)

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016

# மாதிரி வினாத்தாள்

தமிழ் இலக்கிய நயம்
3 மணித்தியாலம்

(ஆசிரியர்-
இரா.நிஷாந்தன்,
கிளி/இராமநாதபுரம் ம.வி.)

♦ பகுதி I இல் 1, 2 ஆகிய வினாக்களிற்கும், பகுதி II இல் 3 ஆம் வினாவுக்கும், பகுதி III இல் 4, 5, 6, 7 ஆகிய வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

01. I தொடக்கம் V வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

I. " ஜயநீ ஆழிவேந்தன் அடி இணை பிரிகிலாதாய்
எய்தியது என்னை என்றாள்

அ. ஆழி வேந்தன் எனக் கருதப்படுபவன் யார்?
இ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

II." அலகு வாள் விழி யாயிழை நன்னுதல்
திலகங் கண்டெதிர் செஞ்சிலை மாரனும்

அ. மங்கையின் அழகுச் சிறப்பினை குறிப்பிடுக?
ஆ. செஞ்சிலை மாரன் எனப்படுபவன் யார்?

III."மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன் ...

அ. மீன், மதி என்பவற்றின் பொருள் யாவை?
ஆ. நட்சத்திரங்கள் கலக்கமடையக் காரணம் யாது?

IV."பிள்ளைமீன் புள்ளிரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்..

அ. திருமடந்தை என்பதன் பொருள் யாது?
ஆ. பூவாளி என்பதால் கருதப்படுவது யாது?

V." போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்த
பெண்ணின் வதன வனப்புக்கு தோற்று அழிந்து விட்டதே...

அ. மேற்படி கூற்று இடம் பெற்றுள்ள கட்டுரை ஆசிரியர்?
ஆ. வதன வனப்பு என்பதன் கருத்து யாது?

02. கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

என்றும் அடிமைச் சிறையினிலே வைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது உரிமை
பேசிடிலோ அது பெருந்தவறு என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலையடைப்போம்

சாதிச் சமய சங்கறுத்து பெண்கள்
தாழ்வெனும் தீய போக்கொழித்து இம்
மேதினியில் புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்.

அ. இக் கவிதையின் மையக்கருத்து யாது?
ஆ. குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு கோதையர் போரிட முன்வருவோம்.. எனும் அடிகளின் சிறப்பினை விளக்குக.
இ. மலையக தோட்டத் தொழிலாளி பெண்களின் விடுதலை வேட்கை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
ஈ. எண்ணற்கரிய கலைகள் படைக்க வேண்டியதன் அவசியம் யாதென கவிஞர் உரைக்கின்றார்?
உ. பொருள் தருக.
i. எத்தர்
ii. கோதையர்
iii. மேதினி
iv. குன்று

## பகுதி II

03. கீழ்க்காணும் உரைப்பகுதியினை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

பசுவின் மடியும் பால் சுரந்தது. கண்களில் நீரும் வழிந்தது. அது கதறிய கதறலுக்கு சுவருக்கு அப்பால் நின்ற காளைமாடும் எதிரொலி கொடுத்தது. தைப்பொங்கல் வந்தது. மனிதர்கள் சாப்பிட்ட மறுநாள் மாட்டுக்காகவும் பொங்கல் வைத்தார்கள். அடுத்த வீட்டுக் காளைக்கு அதன் சொந்தக்காரன் கொம்பு சீவிவிட்டு அலங்காரங்கள் செய்துவைத்து அதைத் தட்டிக் கொடுத்து ஊர் சுற்ற அனுப்பி வைத்தான். கிராமத்தில் அது இருந்தபோது மஞ்சுவிரட்டில் கலந்து கொண்டு ஊரையே கதிகலங்கிய காளை. பட்டணத்திற்கு வந்த பிறகு அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை. பார வண்டி இழுப்பதோடு சரி.

அந்தக் காளைமாட்டுக்கு மஞ்சுவிரட்டு நினைவு வந்து விட்டது. அந்த நினைவோடு சுவருக்கு அப்பால் நின்ற பசுவை எட்டிப்பார்த்தது. பசு தனக்கெதிரில் வைத்த பொங்கலை முதலில் முகர்ந்து பார்த்துக் கண்ணீர் வடித்தது. பிறகு தன் கொம்புகளால் அந்தப் பாத்திரத்தையே மோதிக் கீழே உருட்டி விட்டது. திரென்று ஏதோ ஓர் பரபரப்பான சத்தம் கேட்டது. நாலுகால் பாய்ச்சலில் தெருவே அதிரும் ஓசையுடன் அடுத்த வீட்டுக் காளை அங்கே வந்து கொண்டிருந்தது. சீவி விட்ட கொம்புகள் மின்னல் கீற்றுக்களைப் போல் ஒளிர்ந்தன. கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன.

தரையைக் குத்திக் கிளறி ஒவ்வொரு கொம்பிலும் ஒவ்வொரு பிடி மண்ணைச் சுமந்து கொண்டு அது அடுத்த பாய்ச்சலுக்கு மாடசாமியின் மகனைக் குறி வைத்தது. மாடசாமி வெடவெடத்துப் போனான். மகனைக் காப்பாற்றப் போனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்ற பயம் வந்துவிட்டது. அவனுக்கு குலை நடுங்கியதால் ஏதேதோ உளறிக் கூக்குரலிட்டான். நொடிப்பொழுதில் என்னென்னவோ நடந்து விட்டது. தாய்ப்பசு முளைக் கயிற்றை அறுத்துக் கொண்டு நாலுகால் பாய்ச்சலில் போய்க் குமரனுக்கும் காளை மாட்டுக்கும் இடையில் நின்றது. காளைமாட்டின் கொம்புகள் அதன் கழுத்தில் பாய்ந்தன. குறுக்கே விழுந்த பசுவைக் கண்டவுடன் காளையின் சீற்றம் பசுவின் பக்கம் திரும்பியது. அது அலறிய அலறலில் கொலைக்கு கொலை பழிக்கு பழி என்ற ஆவேசம் குமுறியது.

அ. பசுவின் மடியும் பால் சுரந்தது. கண்களில் நீரும் வழிந்தது. எனும் வரிகள் எத்தகைய உணர்வினை வெளிப்படுத்துகின்றது? விளக்குக.?
ஆ. காளை மாட்டின் சீற்றம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
இ. காளை குமரனைத் தாக்குவதற்கு காரணமாக அமைந்த சம்பவத்தை விளக்குக?
ஈ. காளை தன் மகனைக் குறி வைத்ததை கண்ட மாடசாமியின் நிலை யாது?
உ. உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடர் ஒன்றை குறிப்பிடுக?

## பகுதி III

♦ *எவையேனும் இரண்டு வினாக்களிற்கு விடை எழுதுக.*

04. கம்பராமாயணம், கிஷ்கிந்தைப்படலத்தில் இலக்குவனனை வழிமறிக்கும் வானர மகளிர் பற்றிய வர்ணனைச் சிறப்பினை தெளிவுறுத்துக.
05. நலம்புனைந்துரைத்தல் அதிகாரத்தில், மங்கையின் அழகை உரைக்க மலர்களையும், மதியையும் ஒப்பிட்டிருப்பதன் சிறப்புக்கள்.?
06. சிலப்பதிகாரம் கானல்வரியில், காவேரி நதியின் வளம், சோழ மன்னன் பெருமைகள் பற்றி எடுத்துரைக்க.
07. காலம் தோறும் அகம் எனும் பாடப்பகுதியில், ஆண்டாள் தன் கண்ட கனவு பற்றி தோழியிடம் கூறுதல், நளவெண்பாவில் தமயந்தியின் காதல் வெளிப்பாடு என்பவற்றை தெளிவுறுத்துக.

♦ ♦ ♦

## விடைகள பகுதி I

01. I. அ. இராமன்
ஆ. தாரையால் இலக்குவனனுக்கு

II. அ. கூர்மையான வாள் போன்ற விழிகளையும், ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்தவள், அழகிய நெற்றியை உடையவள்
ஆ. மன்மதன்

III. அ. மீன் - நட்சத்திரம் . மதி-சந்திரன்
ஆ. நிலவையும், பெண்ணையும் கண்டு கண்டு எது சந்திரன் எது பெண் என அறிந்துகொள்ள முடியாது கலங்கின.

IV. அ. திருமகள் போன்ற தமயந்தி
ஆ. மன்மதன் மலர் அம்புகள்

V. அ. கவிக்கோ அப்துல் ரஹ்மான்
ஆ. முகத்தின் அழகு, எழில்

02. அ. மலையக தோட்டத் தொழிலாளிப் பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அடிமைத்தனங்களை வேரறுத்து தம் வாழ்வில் சுதந்திர உணர்வு பெற்று உலகில் புதிய மாற்றம் படைக்க உறுதி கொள்ளும் அவர்களது சுதந்திர வேட்கை.

ஆ. குன்றினைப் போன்ற வலிமையான மனவுறுதி கொண்டு மலையக தோட்டத் தொழிலாளிப் பெண்களாகிய நாம் தமக்கு அநீதி இழைக்கும் ஏமாற்றுக்காரர்களின் செயல்களை வெற்றி கொண்டிடுவோம் எனும் இந்நிலையானது அழகிய உவமையணியின் வாயிலாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| உவமானம் | - | மலை |
| உவமேயம் | - | மலையக பெண்களின் மனவுறுதி |
| பொதுத்தன்மை | - | உறுதி. |

இ.
- அடிமைச் சிறையில் வைத்திருக்கும் ஏமாற்றுக்காரர்களின் கொட்டம் அடக்கிட மலை போன்ற மனவுறுதி கொள்ள வேண்டும் என உரைத்தல்
- பெண்ணுக்கு கல்வியானது பெரும் தீமையானது, அவர்கள் உரிமை பெறுவது தவறு எனக் கூறுவோரை ஒழித்திட உறுதி கொள்ளல்
- பெண்கள் தாழ்வானவர்கள் எனும் நிலை மாற்றி உலகில் புதிய மாற்றம் படைக்க உறுதி கொள்ளல்.

ஈ. பெண்கள் கல்வி கற்கக்கூடாது, அவர்கள் கல்வி பெறுதல் பெரும் தீமை எனவும், அவர்கள் உரிமை பெறுதல், உரிமை பேசுதல் பெருந் தவறு என கூறுகின்றவர்கள் மண்ணில் புதைந்து போகும் படியாக தாம் எண்ணற்கரிய கலைகளை படைக்க வேண்டும் என கூறுகின்றனர்.

உ. i. ஏமாற்றுவோர்
ii. பெண்கள்
iii. உலகம்/பூமி
iv. மலை

## விடைகள பகுதி II

03.அ. இவ்வரிகள் பரிதாப உணர்வினை வெளிப்படுத்துகின்றது. அதாவது தன் கன்றினை இழந்த தாய்ப்பசுவின் துயர நிலை இதுவாகும். தன் கன்றினை நினைத்த போது அதன் மடியினில் பால் சுரந்தது. ஆயினும் மடியில் சுரக்கும் பாலை குடிப்பதற்கு கன்றானது இல்லை என உணர்ந்த அப்பசுவின் கண்களில் கண்ணீர் வடிகிறது.


ஆ.
- நாலுகால் பாய்ச்சலில் தெருவே அதிரும் படி ஓடி வந்தது.
- சீவி விட்ட கொம்புகள் மின்னல் கீற்றுக்களை போல மின்னின
- கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன
- தரையை குத்திக் கிளறி ஒவ்வொரு கொம்பிலும் ஒவ்வொரு பிடி மண்ணை சுமந்து கொண்டு குமரனை குறி வைத்தது.

இ. தனது கன்றுக்குட்டியின் மரணத்திற்கு காரணமாக இருந்த மாடசாமியை பழிவாங்குவதற்காக அவன் மகன் குமரனை கொல்வதற்கு முற்பட்டது. அதாவது தாய்ப்பசு தனக்கு வைத்த பொங்கலை உண்ணாது அதைத் தட்டி விட்டது. இச் சம்பவத்தை அவதானித்த காளை அதற்கு பழிவாங்கும் பொருட்டு குமரனை தாக்க முற்பட்டது.

(நாளை தொடரும்)

# ஊழல் மோசடிகள் தொடர்பில் பிரிட்டன் பாணியில் விசாரணை

## பிரதமர் ரணில் யோசனை



(கொழும்பு)

**இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பில் பிரிட்டன் பாணியில் விசாரணை நடத்த பிரதமர் ரணில் யோசனை முன்வைத்துள்ளார்**

பாரிய ஊழல் மோசடி விசாரணை காரியாலயத்திற்கு நிகரான விசேட விசாரணைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென கோரியுள்ளார்.இந்த விசாரணைப் பிரிவினை உருவாக்குவதற்கு கொழும்பில் அமைந்துள்ள இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக தொழில்நுட்ப உதவிகள் பெற்றுக்கொள்ளப்பட உள்ளன. புதிய காரியாலயம் அமைப்பதற்கு தேவையான சட்டங்களை அமுல்படுத்தி காரியாலயம் இயங்கும் வரையில் ஊழல் எதிர் செயலகம் தொடர்ந்தும் இயங்கும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரித்தானிய பாணியில் உருவாக்கப்படவுள்ள இந்த காரியாலயத்திற்கு ஏற்கனவே அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இனவாதக் கருத்துக்களை ஆராய்வதற்கு விசேட குழு

(கொழும்பு)

இனவாதக் கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

தேசிய நல்லிணக்கத்திற்கு குந்தகம் ஏற்படுத்தக்கூடிய கடும் போக்குடைய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இந்த குழுவினை அரசாங்கம் நியமிக்கவுள்ளது.

இது தொடர்பிலான சட்ட வரைபு ஒன்றை உருவாக்குவதே இந்த குழுவின் பிரதான நோக்கமாகும்.

இதற்கென மூன்று ஜனாதிபதி சட்டத்தரணிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்தக் குழுவினை உருவாக்குவது குறித்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

நல்லிணக்க முனைப்புக்களுக்கு அண்மைக்காலமாக ஏற்படுத்தப்பட்டு வரும் தடைகளைக் களையும் நோக்கில் இந்தக் குழு நியமிக்கப்பட உள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் இனவாத தூண்டுதல்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சிகரெட் விற்பனை வரி வருமானம் வீழ்ச்சியாம்

சிகரெட் விலையை உயர்த்தியதன் பின்னர் சிகரெட் விற்பனை வருமான வரி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 200 கோடி ரூபா மாதாந்த வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக திறைசேரி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், சிகரெட் விலை உயர்த்தப்பட முன்னதாக மாதாந்த வரி வருமானம் 800 கோடி ரூபாவாக காணப்பட்டது. தற்போது இந்தத் தொகை 600 கோடி ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், தற்போது வருடாந்தம் சிகரெட் விற்பனை ஊடாக அரசாங்கம் 9600 கோடி ரூபா வருமானம் ஈட்டுகின்றது. இந்தத் தொகை இனி வரும் காலங்களில் 7200 கோடி ரூபாவாக வீழ்ச்சியடையும் என தெரிவிக்கப்படுகிறது.

விலை ஏற்றத்தின் பின்னர் சிகரெட் விற்பனை 15 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 912

Search for people, places and things Nagendram Home


தனுஷா




மது




கார்த்தி




நந்தன்





கஜா




லவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



## கட்டுநாயக்க விமான நிலையத்தில்

# 27 லட்சம் பெறுமதியான வெள்ளிக் கட்டிகள் மீட்பு

(கொழும்பு)

டுபாயிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட வெள்ளிக்கட்டிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து மீட்கப்பட்டுள்ளன.

27 லட்சம் ரூபாய் பெறுமதியான 30 கிலோகிராம் வெள்ளிக்கட்டிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெள்ளிக்கட்டிகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் குருநாகல் பகுதியைச் சேர்ந்தவரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீட்கப்பட்ட வெள்ளிக்கட்டிகளை, சுங்கப்பிரிவினர் கைப்பற்றியதுடன், குறித்த நபருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சிறைச்சாலை பதவிகளில் மாற்றம்

(கொழும்பு)

சிறைச்சாலை திணைக்களத்தின் உயர் பதவிகள் சிலவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சிறைச்சாலை காவலர் பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை கைவிடுவதாக அமைச்சு எடுத்த தீர்மானத்துடன், இந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறைச்சாலை நிர்வாக அதிகாரியாக செயற்பட்டு வந்த வெனுர குணவர்தன, பதில் மேலதிக சிறைச்சாலை ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், இன்னும் சில உயர் அதிகாரிகள் பதவிகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. (இ-7)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 100 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 35 | 80 | 100 | 60 |
| தக்காளி | 50 | 60 | 45 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 50 | 60 | 100 | 50 | 80 | 50 |
| கரட் | 80 | 120 | 70 | 80-140 | 140 | 80 |
| பூசணி | 40 | 30 | 25 | 40 | 60 | 40 |
| புடோல் | 60 | 60 | 30 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 35 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | 90 | 180 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 70 | 80 | 120 | 60 |
| பயற்றங்காய் | 140 | 120 | 100 | 140 | 160 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 100 | 50 | 50 | 80 | 50 |
| கறிமிளகாய் | 140 | 100 | 105 | 120 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 30 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 180 | 250 | 180 | 250 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 30 | .70 | 80 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 400 | 300-400 | 400 | 400 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-35 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | 200 | — |
| முள்ளங்கி | 50 | — | 30 | 60 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | 80 | — | — |

# சிறைக்குள் பேரறிவு

21

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



பேரறிவாளன்

**"ஒருபுறம் பதவி, செல்வாக்கு உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சிறை சலுகைகளைக் கேள்வியே எழுப்ப முடியாமல் இருப்பதும் மறுபுறம் 25 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பின்னர் மாநில அரசே முடிவெடுத்து விடுதலை அறிவித்தாலும் எவர் வேண்டுமானாலும் கேள்வி எழுப்ப முடியும் எனில் எங்கள் வழக்கு அரசியல்சாசனத்தின் பிரிவு 14 இற்கு அப்பாற்பட்டதா? மனச்சாட்சி உள்ளவர்கள் பதில் சொல்லட்டும்."**

30 நாட்கள் கழித்தும் அங்கிருந்து எந்தப் பதிலும் வராத நிலையில் 01.03.2016 அன்று அந்தச் சிறையின் முறையீட்டு அலுவலருக்கு (First Appllate Authority) மனு செய்தேன். 21.03.2016 அன்று "நீங்கள் அனுப்பிய 10 ரூபாய்க்கான Indian Postal Order 03.11.2011 இல் எடுக்கப்பட்டதால் காலாவதியாகி விட்டது. எனவே மனு நிராகரிக்கப்படுகிறது" என பதில் அனுப்பினர். இதைக் கண்டுபிடிக்க சிறை அதிகாரிகளுக்கு இரண்டு மாதங்கள் தேவைப்படுகிறது.

நானும் சலிப்படையவில்லை. மீண்டும் மார்ச் ,2016 மாதத்தில் புதிய Postal Order பெற்று 24.03.2016 அன்று புதிய விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பினேன். எனது விடாமுயற்சியை அவர்கள் எதிர்பார்க்கவில்லை போலும். இதற்கும் 30 நாட்களில் எந்தப் பதிலும் வரவில்லை. மீண்டும் நான் 04.05.2016 அன்று மேல்முறையீடு செய்தேன். அதன்பின் விழித்துக் கொண்ட எரவாடா சிறையின் தகவல் அலுவலர் 18.05.2016 திகதியிட்டு எனக்கு ஒரு பதில் அனுப்பினார். அதில் நான் கேட்ட தகவல் மூன்றாம் தரப்பினர் தகவல் (Third Party Information) என்பதால், தர இயலாது எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை இதைவிட எவராலும் கேலிக்குரியதாக்க முடியாது. இனி ஓர் அரசு நிறுவனத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு (Tenders) அதில் ஒருவருக்கு அனுமதியும் மற்றவர்களுக்கு மறுப்பும் தெரிவிப்பர் எனில், மறுக்கப்பட்டவர் எவரும் எப்படி அந்த ஒருவருக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டது எனக் கேள்வி கேட்க முடியாது. நல்ல மதிப்பெண் எடுத்த எந்த மாணவரும் ஒரு பொறியியல் கல்லூரியில் தன்னைவிடக் குறைவான மதிப்பெண் எடுத்தவரை அனுமதித்தது குறித்து கேள்வி எழுப்ப முடியாது. ஏனெனில், அவையெல்லாமும் மூன்றாம் தரப்புத் தகவலாகிவிடுகிறது.



இந்த நிலையில்தான், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான எனது போராட்டத்தில் முதல் முறையாக மேல்முறையீட்டு அலுவலர் எனது சார்பில் பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைக்கும்படி அனுமதிக்கடிதம் அனுப்பினார். 28.06.2016 அன்று எனது சார்பில் மும்பை சட்டத்தரணி நிலேஷ் என்பவர் எரவாடா சிறையின் மேல்முறையீட்டு அலுவலர் முன்பு ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் தனது வாதங்களை முன்வைத்திருக்கிறார். மேல்முறையீட்டு அலுவலரின் பதில் இன்னமும் எனக்குக் கிடைக்கப்பெறவில்லை.

ஒருபுறம் பதவி, செல்வாக்கு உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சிறை சலுகைகளைக் கேள்வியே எழுப்ப முடியாமல் இருப்பதும், மறுபுறம் 25 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பின்னர் மாநில அரசே முடிவெடுத்து விடுதலை அறிவித்தாலும் எவர் வேண்டுமானாலும் கேள்வி எழுப்ப முடியும் எனில், எங்கள் வழக்கு அரசியல் சாசனத்தின் பிரிவு 14இற்கு அப்பாற்பட்டதா? மனசாட்சி உள்ளவர்கள் பதில் சொல்லட்டும்.

நிறைய உங்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றுதான் இந்தத் தொடரின் தொடக்கத்தில் நினைத்தேன். நடைமுறைச் சிக்கல்கள் அதற்கு பெரும் இடையூறாக இருக்கும் என்பது தெரிந்தேதான் அவ்வாறு ஆசைப்பட்டேன். இருப்பினும், அந்த இடையூறுகளை என்னால் கடக்க முடியவில்லை. அந்தத் தடைகளை வருகிற ஓகஸ்ட் 1 அன்று கடந்துவிட முடியும் என நம்புகிறேன். அன்றுதான் மூவர் அமர்வு முன்பு, எங்கள் விடுதலைக்கு எதிரான நடுவண் அரசின் வழக்கு இறுதி விசாரணைக்கு வருகிறது.

கடந்த 19-02-2014 அன்று எங்கள் எழுவரையும் விடுதலை செய்வது குறித்து கருத்துக் கேட்டு அன்றைய காங்கிரஸ் நடுவண் அரசுக்கு முதல்வர் அம்மா தலைமையிலான தமிழக அரசு எழுதிய மடல் குறித்த வழக்கு அது.

கடந்த டிசெம்பர் 02, 2015இல் உச்ச நீதிமன்ற ஐவர் அரசியல் அமர்வு, அதுகுறித்த 7 வினாக்களுக்கு விடை தந்து விட்ட பின்பு அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் மீண்டும் ஒரு கடிதத்தினை கடந்த மார்ச் 02, 2016 அன்று நடுவண் அரசுக்கு மாநில அரசு அனுப்பியுள்ளது என்ற நிலையில் தற்போதைய பி.ஜே.பி. நடுவண் அரசு பழைய கடிதத்தை முடித்துவைக்கத் தயங்குவதன் உள்நோக்கம் என்ன என்பது தெரியவில்லை.

(வலிகள் தொடரும்...)




அண்மையில் இடம்பெற்ற **பிஸ்னஸ் ருடே ரொப் 30** எனப்படும் இலங்கையின் முன்னணி 30 நிறுவனங்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் **(இடமிருருந்து வலமாக)**பீப்ள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் தலைமை நிறைவேற்று அதிகாரி (சிஈஓ)டி.பி.குமாரகே, சிங்கர் சிறிலங்கா சிஈஓ அசோகா பீரிஸ், அற்கின் ஸ்பென்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜே.எம்.எஸ். பிரிட்டோ, சிலோன் டொபாகோ நிதிப் பணிப்பாளர் எமா றிட்லி, நெஸ்ரல் சிறிலங்கா முகாமைத்துவப் பணிப்பாளர் சிவானி ஹெடகே, றிச்சட் பீரிஸ் அன்ட் கம்பனி பணிப்பாளர் விவிலி பெரேரா, ஹேலீஸ் பணிப்பாளர் சரத் ஹனகொட, சவரன் லுப்ரிக்கன் லங்கா சிஈஓ டாக்டர். கிசு ஹோம்ஸ், செலிங்கோ இன்சுரன்ஸ் சிஈஓ அஜித் குணவர்த்தன, கொமர்சல் வங்கி தலைவர் தர்மா ஹெரசிங்க, சிறிலங்கா ரெலிகொம் தலைவர் பி.ஜி.குமாரசிங்க சிறிசேன, ரெக்ஸட் ஜேசி சிஈஓசில்வா விஜேரத்ன, சொப்ட் லொஜிக் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரொசான் ரசூல் மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க, போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் சிரி ஹோல்டிங் பணிப்பாளர் சஞ்ஜய் நில்ஸ், டீஸ்லரிஸ் சிறிலங்கா தலைவர் ஹரி ஜெயவர்த்தன, டீஎப்சிசி வங்கி சிஈஓ அர்ஜான் பெர்னாண்டோ, லங்கா ஐஓசி முகாமைத்துவப் பணிப்பாளர் சியாம் போகரா, பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிரதி தலைவர் பிரதீப் அமிர்தநாயகம், ஹேமாஸ் ஹோல்டிங் சிஈஓ ஸ்ரீவன் என்டபை, சென்ரல் பினான்ஸ் கம்பனி பணிப்பாளர் ரவி ரம்புக்வெல, புக்கிட் தாரா பணிப்பாளர் சந்திம குணவர்த்தன, கொமர்சல் வங்கி சிஈஓஜெகன் துரைரட்ணம், எல்ஓஎல்சி சிஈஓ கபில ஜெயவர்த்தன, ரெக்ஸட் ஜேசி பணிப்பாளர் அஸ்ரப் ஓமர், ஹற்றன் நசனல் வங்கி அதிகாரி டில்சான் ரொட்றிகோ, டயலொக் சிஈஓ ஹான்ஸ் விஜேசூரிய, வலிவல் வன் சிஈஓ டினுசா பாஸ்கரன், என்டிபி தலைவர் ஆனந்த அத்துகோரள, அக்சஸ் என்ஜினியரிங் தலைவர் சுமல் பெரேரா, செலான் வங்கி சிஈஓ டிலான் விஜேசூரிய, நேசன் ரஸ்ட் வங்கி சிஈஓ ரேணுகா பெர்னாண்டோ ஆகியோரைப் படத்தில் காண்கிறீர்கள்.

# சம்பத் வங்கிக்கு கௌரவிப்பு




ஆசிய சந்தைப்படுத்தல் சம்மேளனத்தினால் வழங்கப்படும் சந்தைப் படுத்தலில் சிறப்பு விருதான, சந்தைப் படுத்தல் 3.0 எனும் விருது சம்பத் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில், தென்கொரியாவின் சியோல் நகரில் நடைபெற்றது. சந்தைப்படுத்தல் 3.0 விருது மற்றும் ஆண்டின் சிறந்த சந்தைப்படுத்தல் நிறுவனம் ஆகியன குறித்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் வழங்கப்பட்ட பிரதான இரு விருதுகளாக அமைந்திருந்தன. தேசத்துக்கு முக்கியத்துவம் வழங்கி, வாடிக்கையாளர்களை மையமாகக்கொண்டு பெறுமதி வாய்ந்த சேவைகளை வழங்கி வரும் சம்பத் வங்கி, இந்த சந்தைப் படுத்தல் 3.0 விருதுக்காக, இலங்கை சந்தைப்படுத்தல் கல்வி யகத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் மற்றும் AMFஇனால் முன்னெடுக்கப் பட்டிருந்த பல்வேறு மதிப்பாய்வு செயற்பாடுகளில், வங்கி போட்டியாளர்களைவிட முன்னிலையில் காணப் பட்டது.

சந்தைப்படுத்தல் 3.0 விருதின் மூலமாக வங்கியின் நோக்கம், தன்னேற் புத் திட்டம் மற்றும் பெறுமதிகள் போன்றவற்றைப் பேணுகின்ற கலாசாரம் கௌரவிக்கப் பட்டுள்ளது. அத்துடன், வங்கியின் சந்தைப்படுத்தல் கொள்கை நுகர்வோரின் தேவைகளை மட்டும் பிரதிபலிக்காமால், நுகர்வோரின் ஒன்றிணைந்த தேவைகளையும், கலாசார சந்தைப்படுத்தல் பின்பற்றல்களையும் கலாசார மற்றும் பண்பார்ந்தச் சந்தைப்படுத்தல் வழிமுறைகளையும் கௌரவிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

சௌகரியம், புத்தாக்கம் மற்றும் பெறுமதி சேர்ப்புகள் போன்ற வினைத்திறன் வாய்ந்த வங்கியியல் தீர்வுகளை வழங்குகின்றமைக்காக சம்பத் வங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. வங்கியின் வளர்ச்சி, சந்தைப்பங்கு மற்றும் தேறிய வருமானம் போன்றவற்றில் இது குறிப்பிடத்தக்களவு பங்கைக் கொண்டுள்ளது.




## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,326.11 | 6,252.12 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,514.98 | 3,476.54 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 1,956.649

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ஈகுவிட்டி ரூபிஎல்சி(54.90), ஹோல்ட் ஸ்ரோர்(803.50), சிரிலான்ட்(58.20), ஈஸ்ட் வெஸ்ட்(14.00), ரேடியன் ஜெம்(25.50).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** அலியான்ஸ்(77.20), ரீ சிமோல் ஹோல்டர்(22.50), புளூ டைமன்ட்ஸ்(0.50), பலாங்கொட (11.90), ஆசிரி(25.00).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

# புத்தளம்-மன்னார் வீதியை சீர்செய்தால் யாழ்-கொழும்பு தூரம் 120 கி.மீ. குறையும்

எலுவன்குளம் பாதையைப் புனரமைப்பதன் மூலம் கொழும்பு -யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப் பயணத்தை 120 கிலோமீற்றரால் சுருக்கி, மேம்படுத்தலாம். இவ்வாறு நடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார் அமைச்சர் ரிசாட் பதியுதீன்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புத்தளம்-எலுவன்குளம் பாதையைச் செப்பனிடும் முயற்சி சுயநலம் கொண்டவர்களின் சதி நடவடிக்கையினால் இடைநிறுத்தப் பட்டுள்ளது.அதனைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த வீதியை செப்பனிட்டால் கொழும்புலிருந்து புத்தளம், மன்னார், மறிச்சுக்கட்டி, சங்குப்பிட்டிப் பாலம் ஊடாக யாழ்ப்பாணத்துக்குச் செல்ல முடியும்.

இதனால் கொழும்பு- யாழ்ப் பாணத்துக்கு இடையிலான பயணப் பாதை சுமார் 120 கிலோ மீற்றர் குறையும். பயண நேரமும் 5 மணி நேரமாக குறைவடையும் இதன்மூலம் மக்களும் நன்மையடைவர்.வீண் விரயங்கள் குறையும். நாட்டின் பொருளாதாரம் மேம்படும் என்றார் அமைச்சர்.

குறித்த வீதியை புனரமைப்பதன் மூலம் யாழ்ப்பாணம்-வவுனியா -அநுராதபுரம்- தம்புள்ளை-குருநாகல்-கொழும்பு என்ற தற்போதைய சுற்றுப்பாதையைப் பாவிப்பதால் ஏற்படும் நேர விரயம் தவிர்க்கப்படும்.

யாழ்ப்பாணம்-மன்னார்-புத்தளம்-கொழும்பு வீதியை சீர்செய்யும் வேண்டுகோளை நல்லாட்சி அரசிடம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் விடுக்க வேண்டியது அவசியம்.



# ஒக்டோபர் பணவீக்கம் 0.3வீதத்தால் அதிகரிப்பு

ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2016 ஒக்டோபர் மாதத்தில் பணவீக்கமானது 5 சதவீதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில்4.7 சதவீதமாக பதிவு செய்யப்பட்டிருந்த பணவீக்கமானது 0.3 சதவீத அதிகரிப்புடன் 5.0 சதவீதமாக உயர்வடைந்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வுயர்வுக்கு உணவு மற்றும் உணவல்லா வகைகள் தாக்கம் செலுத்தியுள்ளன. ஆண்டுச் சராசரி அடிப்படையொன்றின் மீது அளவிடப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றம் 2016 செப்ரெம்பர் மாதத்தில் 3.8 சத வீதத்திலிருந்து 2016 ஒக்ரோபர் மாதத்தில் 4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

# அதிக விருதுகளை தனதாக்கியது ரிவிஎஸ் நிறுவனம்

SLIM Brand Excellence விருதுகள் வழங்கும் நிகழ்வில் புதிய சாதனையை நிகழ்த்திய வண்ணம், ஒரு வர்த்தக நாமம் பெற்றுக்கொண்ட அதியுயர் விருதுகளை TVS நிறுவனம் தன்வசப்படுத்தியிருந்தது. இந்த விருதுகள் வழங்க ஆரம்பிக்கப்பட்டு 15 வருட காலப்பகுதியில், ஆறு விருதுகளை வேறு எந்தவொரு நிறுவனத்துக்கும் இதுவரையில் பெற முடியாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

TVS நிறுவனத்தின் நாடு முழுவதும் பரந்து காணப்படும் வலையமைப்பில் விற்பனைப் பிரதிநிதிகள், சேவை பிரதிநிதிகள் மற்றும் உதிரிப்பாக பிரதிநிதிகள் ஆகியோர் என மொத்தமாக 1,400 பிரதிநிதிகள் வரையில் காணப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 146.58 | 150.34 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 181.65 | 187.94 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.71 | 159.70 |
| சுவிஸ் பிராங் | 143.11 | 148.91 |
| கனேடிய டொலர் | 107.92 | 112.26 |
| அவுஸ்திரேலிய டொலர் | 107.83 | 112.75 |
| சிங்கப்பூர் டொலர் | 101.91 | 105.71 |
| ஜப்பான் யென் | 1.28 | 1.33 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 40.27 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி



மினவலு மறறும மளபுததாகக சகதி அமைசசின "இருள நங்கி ...நாடே ஒளியில" எனும தொனிபபொருளில தேசிய மின செயறபாடு தொடாபான நடமாடும சேவை நேறறு ஞாயிறறுககிழமை வவுனியா தமிழ மததிய மகா விததியாலயததில மினவலு மறறும மளபுததாகக சகதி அமைசசா ரஞசித சியமபலாபிட்டிய தலைமையில நடைபெறறபோது. (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# பிலிப்பைன்ஸில் ஆயிரக்கணக்கான சீனப் பிரஜைகள் அதிரடியாக கைது

(மணிலா)

பிலிப்பைன்ஸில் 1,200 இற்கும் மேற்பட்ட சீனப்பிரஜைகள் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பிலிப்பைன்ஸ் குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் மணிலாவின் வட பகுதியில் அமைந்துள்ள பம்பன்கா (Pampanga) மாகாணத்தில் இயங்கி வந்த சூதாட்ட மையத்தில் இடம் பெற்ற திடீர் சுற்றிவளைப்பின் போதே, குடிவரவு அதிகாரிகளால் இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட குடிவரவு பணியகத்தின் தலைமை அதிகாரி ஜோஸ் லிகாஸ், நாட்டில் இருந்து சூதாட்டத்தை முழுமையாக அகற்றும் முயற்சியின் ஒரு கட்டமாக, இந்த அதிரடி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

மேலும் குறித்த மையத்தில் இருந்து கணனிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களிடம் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, கடந்த செப்டெம்பர் மாதம் இதே மாகாணத்தில் 154 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-7)


# பாகிஸ்தான் இராணுவத்தின் புதிய தளபதியாக குவாமர்

பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்த பிறகு அதிககாலம் இராணுவ ஆட்சியே நடைபெறறுள்ளது. பாகிஸ்தானின் சக்திமிக்க நபர் என்று அந்நாட்டின் இராணுவ தளபதி கருதப்படுகிறார். அதனால், இராணுவ தளபதி நியமனம் பாகிஸ்தானில் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்நிலையில், பாகிஸ்தானின் தற்போதைய இராணுவ தளபதி ரகீல் ஷெரீப் பதவிக்காலம் இம்மாதம் 29ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து புதிய தளபதியாக லெப்டினனட் ஜெனரல் குவாமர் ஜாவேத பஜ்வா நியமிக்கப்பட்டுள்ளார். ரகீல் ஷெரீப் செவ்வாய்க்கிழமை முறைப்படி ஓய்வு பெற்றதும் பாஜ்வா இராணுவ தளபதியாக பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல் ஊழியர் கமிட்டியின் கூட்டுத் தளபதிகளின் தலைவராக லெப்டினன்ட் ஜெனரல் சுபேர் ஹயாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமரின் ஆலோசனைப்படி, சுபேர் ஹயாத், குவாமர் ஜாவேத் பஜ்வா ஆகியோரின் பதவி உயர்வுக்கு ஜனாதிபதி மம்னூன் உசைன் ஒப்புதல் அளித்திருப்பதாக பிரதமர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.




பஜ்வா தற்போது பாகிஸ்தான் இராணுவத்தின் பயிற்சி மறறும் மதிப்பீட்டு பிரிவில் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக பதவி வகித்து வருகிறார். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## குணச்சித்திர வேடங்களில் முத்திரை பதித்தார் பத்மினி

309

..இதற்கிடையே லலிதாவும் பத்மினியும் தனித்தனியாகவும் நடிக்கலானார்கள்.

11.04.1951இல் வெளிவந்த ஓர் இரவு படத்தின் கதாநாயகியாக லலிதா நடித்தார்.

### சிவாஜிகணேசனுடன் முதல் படம்

1952இல் பராசக்தி தயாராகி வந்த போதே என். எஸ். கிருஷ்ணன் டைரக்‌ஷனில் ஏ.எல்.எஸ். தயாரித்த பணம் என்ற படத்திலும் சிவாஜிகணேசன் நடித்து வந்தார். இந்தப்படத்தின் கதாநாயகி பத்மினி.

சிவாஜியும் பத்மினியும் முதன் முதலாக சந்தித்துக் கொண்டபோது வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

பப்பிம்மா! நான் நாடக நடிகனாக இருந்தபோது உங்கள் படங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறேன். குறிப்பாக மணமகள் படத்தில் உங்கள் நடிப்பு சிறப்பாக இருந்தது. அப்போதெல்லாம் எதிர்காலத்தில் உங்களுடன் சேர்ந்து நடிப்பேன் என்று நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை என்றார் சிவாஜி.

பத்மினி சிரித்துக்கொண்டே கணேஷ்! இப்போது தமிழ்ப்பட உலகில் இளம் கதாநாயகர்களே அநேகமாக இல்லை. அந்தக் குறையைப் போக்கும் விதத்தில் நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

நீங்கள் நடித்துக்கொண்டிருக்கும் பராசக்தி படம் பற்றி இப்போதே பரபரப்பாக பேசுகிறார்கள். நீங்கள் எதிர்காலத்தில் மிகவும் புகழ் பெறுவீர்கள் என்று கூறினார்.

பராசக்தி வெளிவந்த சில நாட்களுக்குப்பின் பணம் வெளியாகியது. பராசக்தியைப் போல இப்படம் பெரிய வெற்றி பெறவில்லை என்றாலும் சிவாஜி, பத்மினி ஜோடிப் பொருத்தம் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது. அதன் காரணமாக நிறையப் படங்களில் இருவரும் இணைந்து நடித்தனர்.

குணச்சித்திர வேடங்களில் பத்மினியும் இணைந்து நடித்து பல அற்புதமான படங்களை தந்தனர். தமிழ்த் திரை உலகின் இணையற்ற ஜோடி என்று ரசிகர்களால் பாராட்டப்பட்டனர்.



குணச்சித்திர வேடங்களில் சிறப்பாக நடித்தார், பத்மினி.
(படம் : 'மங்கையர் திலகம்')

1954ஆம் ஆண்டில் சிவாஜியும் பத்மினியும் பல படங்களில் இணைந்து நடித்தனர்.

பி.ஆர் ப்ந்துலுவின் பத்மினி பிக்சர்ஸ் தயாரிப்பான கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி நகைச்சுவைப் படம். இதில் சிவாஜியும் பத்மினியும் ஜோடியாக நடிக்க முக்கிய வேடத்தில் ராகினி நடித்தார். அவருக்கு ஜோடி டி.ஆர்.ராமச்சந்திரன்.

இப்படத்தில் வெண்ணிலாவும் வானும் போல... என்ற பாரதிதாசன் பாடலை எம். எல். வசந்தகுமாரி அருமையாக பாடினார். ராகினி பாடுவது போல அந்தப் பாடல் காட்சி படத்தில் இடம்பெற்றது.

### தூக்குத்தூக்கி

1954ஆம் ஆண்டின் மிகப் பெரிய வெற்றிப் படங்களில் ஒன்றான தூக்குத்தூக்கியில் சிவாஜியுடன் லலிதா, பத்மினி, ராகினி ஆகிய மூவரும் நடித்தனர்.

(தொடரும்)

வீரனின் ஒரு நாள் வாழ்வு; ஒரு கோழையின் முழு வாழ்வுக்குச் சமன்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உன்னதத் தலைவனின் பிறப்பும் மேன்மைத் தலைவனின் இறப்பும்

கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ரோ இயற்கை எய்தினார் என்ற செய்தி காற்றோடு கலந்தபோது ஓர் இலட்சியத் தலைவன் மறைந்தான் என்ற வரலாறு பிறந்து கொண்டது.

தலைவர்கள் உருவாக்கப்படவில்லை பிறக்கின்றார்கள் என்று கூறப்பட்ட வரைவிலக்கணத்தை மெய்ப்பித்தவர்களில் காஸ்ரோவும் ஒருவர்.

கியூபாவின் ஏகத் தலைவனாக இருந்த காஸ்ரோ மார்தட்டி போர் முரசு செய்தவன் அல்ல; அவன் தன் இதயத்துச் சிந்தனையை இலட்சியமாக்கி அதனை இந்த உலகுக்கு வரலாறாக்கி வருங்காலத்தவர்களின் படிப்புக்கும் வாய்ப்புத்தந்துவிட்டுப்போயுள்ளான்.

வாழும் காலத்திலேயே வரலாறாகி உலகின் படிப்புக்குரியவர்களாக இருந்த தலைவர்கள் மிகக் குறைவு. அந்த அரிதான தலைவர்களில் காஸ்ரோவும் ஒருவர்.

ஒரு தடவையேனும் சந்தித்துவிட வேண்டும் என்று இந்த உலகம் யார் மீது கருசனை கொள்கின்றதோ அவனே தலைவனுக்குரிய பண்புடையவன்.

தலைமைத்துவ பண்புகள் பற்றி இன்றைய முகாமைத்துவம் பலவாறு பேசிக் கொள்கிறது. ஆனால் எம்மைப் பொறுத்தவரை நேரில் சந்திக்காத போதிலும் எந்தவொரு தலைவனின் பெயர் உலகம் முழுவதிலும் உணர்வுபூர்வமாக பேசப்படுகிறதோ அவனே தலைவனாக முடியும்.

தலைவனுக்கு எதிரிகள் இருக்கலாம். ஆனால் அந்த எதிரிகளும் மானசீகமாக மதிப்பளிப்பதாக இருந்தால் அந்தத் தலைவனுக்கு நிகர் யாருமாக இருக்க முடியாது. அத்தகைய தலைவர்கள் வரிசையில் இரண்டு தலைவர்கள்.

அதில் ஒரு தலைவர் கியூபா நாட்டின் காஸ்ரோவாக இனம் காணமுடியும். வல்லாதிக்க நாடுகள் எத்தனையோ தொந்தரவுகள் கொடுத்த போதிலும் காஸ்ரோ யாருக்கும் அடி பணிந்திலர். அவர் தன் இலட்சியத்துக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர். இதனால் எதிரிகளும் காஸ்ரோ என்ற பெயர் கேட்ட போதெல்லாம் உள்ளத்தால் மதிப்புக் கொடுத்தனர்.

நேர்மை, நீதி, ஊழலற்ற வாழ்வு, மக்களுக்காக தன்னை அர்ப்பணித்த தியாகம், எவர்க்கும் அஞ்சாத வீரம் இவற்றின் சொந்தக்காரரான காஸ்ரோ தன் இறப்பும் ஓர் உன்னத தலைவன் பிறந்த நாளாக இருக்க வேண்டும் என்று நினைத்தார் போலும்.

அதனால்தான் தன் இறப்பின் திகதியை 26 நவம்பர் என ஆக்கிக் கொண்டார். 26 நவம்பர் உலகத் தமிழர்கள் தங்கள் உன்னத தலைவன் பிறந்த நாள் என்று பெருமை கொள்கின்ற தினம்.

அந்தத் தலைவனை எதிரியும் போற்றினர். ஆம், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மிகச் சிறந்த வீரர். ஒழுக்கமுடைய தலைவன் என்று எதிரிகள் போற்றியதே அதிகம்.

பிரபாகரன் வாழ்ந்த இடம் என்று எதைக் காட்டினாலும் அதைத் தரிசிக்க சிங்கள மக்களே அதிகம் முண்டியடித்தனர்.

இதோ! இதுதான் முல்லைத்தீவு. இங்குதான் பிரபாகரன் இருந்தார் என்றதும் சுற்றுலா வந்த தென்பகுதி சகோதரர்கள் ஒரு வீரனுக்குரிய மதிப்பைக் கொடுத்து மிகுந்த கௌரவத்துடன் அந்த இடத்தை சுற்றி வலம் வந்தனர்.

அதோ! வல்வெட்டித்துறை. இதுதான் பிரபாகரன் பிறந்த மண், வாழ்ந்த வீடு என்றதும் அந்த இடத்தைப் பார்க்காமல் சென்றால் வடக்குக்கான எங்கள் சுற்றுலா முழுமை பெறாதன்றோ!

ஆகையால் தலைவர் பிரபாகரன் பிறந்த – வாழ்ந்த மண்ணை, வீட்டை பார்த்துவிட வேண்டும் என்று ஆசை கொண்டவர்கள் சிங்கள மக்கள்.

இதற்குக் காரணம் பிரபாகரனை அவர்கள் எதிரியாகப் பார்க்கவில்லை. மாறாக எங்கள் நாட்டில் இப்படி ஒரு தலைவனா என்ற பிரமிப்பே ஆகும்.

இதனால்தான் பிரபாகரனின் வீட்டு மண்ணை எடுத்துச் சென்றனர். விருப்பமில்லாத ஒருவரின் வீட்டு மண்ணை யாராவது எடுத்துச் செல்வாரா என்ன?

ஆக, தலைவர் பிரபாகரனின் வீட்டு மண்ணை எடுத்துச் சென்று அதனை தங்கள் வீட்டில் வைத்திருப்பதை பெருமை என்று கருதப்பட்ட ஒரு தலைவன் பிறந்த நாளில் இன்னொரு தலைவன் இறந்தான்.

ஓர் உன்னத தலைவன் பிறந்த நாளும் இன்னொரு மேன்மைத் தலைவனின் இறந்த நாளுமாக சேர்ந்து நவம்பர் 26க்கு மகா பெருமையைக் கொடுத்துள்ளது என்றால் அது மிகையன்று.

# தொழிலைக் கைவிடும் நிலையில் நெடுந்தீவு மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் இழுவைப் படகுகளின் அடாத்தான செயற்பாடுகளால் தமது தொழிலைக் கைவிடும் இக்கட்டான நிலையில் நெடுந்தீவு வாழ் மீனவர்கள் உள்ளனர்

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனை அளிக்கிறது என நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் அ.அருள்ஜீவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது நெடுந்தீவுப் பிரதேசத்தில் பெரும்பாலானோர் கடற்றொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றோம். இந்நிலையில் கச்சதீவுக்கும் இந்தியாவின் இராமேஸ்வரத்துக்கும் அண்மித்த பிரதேசம் என்ற வகையில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலானது மிக நீண்ட காலமாக எமது மீனவ சமூகங்களின் வாழ்வாதாரத்தின் மேல் மோசமான ஒரு அழிவு தரும் விளைவை ஏற்படுத்தி வருகின்றது.

தற்போது இந்திய இழுவைப்படகுகளின் அத்து மீறலானது ஓரளவு குறைவடைந்து காணப்படுகின்ற நிலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உள்ளூர் இழுவைப் படகுகளின் அடாத்தான செயறபாடுகள் கடந்த சில மாதங்களாக மிகவும் மோசமாக அதிகரித்து காணப்படுகின்றன. இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று எமக்கு வருத்தத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இழுவைப்படகுகள் பாரபட்சமின்றி அதன் பாதையிலுள்ள எல்லா கடல்சார் வளங்கள் யாவற்றையும் துடைத்தெடுத்துக் கொண்டு செல்கினறன. தொடர்ந்து நடைபெற்று வரும் இம்மோசமான நடவடிக்கையினால் எமது கடல் வளங்கள் முற்றிலுமாக அழிவடைந்து அருகிப் போய் விட்டன.

மேலும் இவ் இழுவைப் படகுகள் எமது வளங்களை அழிப்பதுடன் மட்டுமல்லாது பல இலட்சம் ரூபாய்களை செலவு செய்து நாம் தொழில் புரிந்து வரும் மீன்பிடி வலைகளினை இழுவைப் படகுகள் நாசம் செய்து அள்ளிச் சென்று விடுகின்றன. இந்நிலைமையால் மீனவர்களாகிய நாம் மேலும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றோம். தங்கள் வலைகளைப் பறிகொடுத்த பலர் இன்னமும் அதிலிருந்து மீள முடியாமல் இருக்கின்றார்கள். இந்நிலைமையானது தொடர்கதையாகின்றது.

இந்நிலையில் இழுவைப் படகுகள் அடாத் தாக தொழில் புரியும் நாட்க ளில் நாம் எமது தொழிலு க்குச் செல்ல முடியாதவர்க ளாக முடக்கப்படுகின்றோம்.

எமது துன்ப நிலைமை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள், அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களதும் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு சென்றிருந்தோம். இழுவை மடித் தொழிலுக்கு எதிரான கவனயீர்ப்பு நிகழ்வுகளையும் இருதடவைகள் நடத்தியிருந்தோம். எமது பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கவில்லை. எமது துன்ப நிலைமை தொடர்கதையாகவே அமைகின்றது.

எனவே எமது பாரம்பரியமான தொழிலைக் கை விட வேண்டிய நிலையில் நெடுந்தீவு வாழ் மீனவர்களாகிய நாம் தற்போது உள்ளோம் என சம்பந்தப்பட்ட தரப்புக்களிற்கு மனவருத்தத்துடன் தெரிவித்து நிற்கின்றோம் என அறிக்கையில் அவர் மேலும தெரிவித்துள்ளார். (இ-9)

# காபூலிலிருக்கும் ஆப்கானுக்கான இலங்கை தூதுவர்மீது கடல் கடந்து அங்கு வாழும் இலங்கையர்களின் அதிருப்தி

ஆப்கானிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் A.L.T தாஜ்முதீன் மீது அங்கு கடல் கடந்து வாழும் இலங்கையர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு விசாரணையில் இறங்கியுள் ளது.

விசாரணை நடைபெறுகிறபோதிலும் அது பற்றிய விபரங்களை இப்போது வெளியிட முடியாதுஎன ஊடகப் பேச்சாளர் மஹிசினி கூறுகிறார். முக்கியமாகக் கடல் கடந்த நிலையில் தலைநகர் காபூலில் வசித்துவரும் இலங்கை சமூகத்தினரின் மோசமான குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கையில் இருக்கும் அவர் மீது இலங்கையின் மேம்பாட்டிற்கோ நற்பெயருக்கோ எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் குறை கூறப்படுகிறது.

ஆப்கானில் வாழ்ந்து தொழில்புரிந்து வருபவர்களாகிய இலங்கை- ஆப்கான் நட்புறவுக் கழகத்தின் (SLAA) 50 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அனுப்பிய கடிதமொன்றின் படி தூதுவர் நஜ்முதினின் நடவடிக்கைகள் இலங்கையின் கௌரவத்திற்கும் மகத்துவத்திற்கும் பாதிப்பினையே ஏற்படுத்துவதாய் இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதுவரையில் ஆப்கானின் இலங்கை சமூகத்தை சந்திக்காதிருக்கும் அவரால் நல்லவிதமான பிரதிநித்துவத்தை வெளிக்கொணர முடியாதிருப்பதுடன் இருநாடுகளுக்குமிடையே இருதரப்பு வர்த்தகத்தினை மேம்படுத்திக் கொள்ளவும் முடியவில்லை என்று கூறும் ஜயசூரிய தாம் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர் உட்பட சம்பந்தப்பட்டவர்கள் பலருக்கும் பல கடிதங்களை எழுதிய போதிலும் இதுவரையில் நடவடிக்கையெதுவுமில்லை என்று கூறுகிறார். இதுமட்டில் நஜிமுதீனை தொடர்பு கொள்வதற்கு பல தடவைகள் முயற்சித்த போதிலும் பலன் கிட்ட வில்லையென்று அவர் மேலும் கூறினார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2016

"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடி கொள்ளச் செய்யும் ஒன்றாகும்"

–ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 6.30 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** கோம்பாவில், இரணைப்பாலை, ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** போகஸ்வெவ கிராமத்திலும் **மன்னார் பிரதேசத்தில** நானாட்டானிலிருந்து அச்சங்குளம் வரை, எருவிட்டான், அறுகுக்குன்று ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

JSAC


யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

16
2016

யுத்தங்கள் ஓய்ந்தாலும், பெண்களின் அவலச் சத்தங்கள் ஓயவில்லை. முரண்பாட்டின் முடிவில் இன்னமும் அடிமைத்தனம். முரண்பாடில்லா சமுதாயத்திற்காய் முடிந்தவரை முயற்சி செய்வோம்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## குண்டலினி யோகம்



நாம் உணர்ந்து உலகிற்கு உணர்த்துவது எளியமுறைக் குண்டலினி யோகம் என்பதாகும். எளியமுறைக் குண்டலினி என்பது அறிவின் பதிவைக் கொண்ட உயிர்ச் சக்தியை மேலே நோக்கி எழச் செய்து அதிலே ஒன்றி நின்று இயற்கை இரகசியங்களை உணர்ந்து தன்னிலை உணரும் பயிற்சியாகும். உயரே சொல்லாமல், கீழ்நோக்கிப் போகா விட்டால் மேல்நிலை அனுபவ உணர்வு பெறுவது போய், தாழ்ந்த உணர்வுகளே தலையெடுத்து ஓங்கும் நிலை ஏற்படும். அதைத் தான் இன்று பெரும்பாலும் காண்கிறோம். அதனால் தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. மனிதனின் இந்தப் பழக்கத்தால் அவனின் உயிர்ச்சக்தி கீழ் நோக்கிய இடத்தில், அதாவது மூலாதாரத்தில் தேங்கிக் கிடக்கின்றது குண்டலித்து உள்ளது. இதனையே குண்டலினி சக்தி என்கிறோம். சக்தி என்ற உடன் அது உடல் எங்கும் நிலவுவதாயிற்றே என்ற எண்ணம் எழலாம். எங்கும் இயங்கும் சக்திக்கு ஒரு இயக்க மையம் வேண்டும் அல்லவா? இந்த இயக்க மையமே மூலாதாரம் எனப்படும். எனவே, இயக்க மையத்தை முறையாக உசுப்பி விடும்போது மிகச் சிறப்பாகச் செயற்படுவது இயல்பு. அதைத்தான் எளியமுறைக் குண்டலினி யோகப் பயிற்சி என்கிறோம். இந்த உயிர்ச்சக்தி உடலின் மற்ற எல்லா இடத்திலும் பரவி இருப்பினும் அதற்கு ஒரு இயக்க மையம் உண்டு. இரத்தம் உடல் முழுவதிலும் பரவி இருந்தாலும் இருதயத்தை இயக்க மையமாகக் கொண்டிருப்ப தனைப் போல, காற்று உடல் முழுவதிலும் பரவி இருப்பினும் நுரையீரலை இயக்க மையமாகக் கொண்டிருப்பதனைப் போல, உயிர்ச் சக்திக்கும் இயக்க மையம் இருக்கத்தானே வேண்டும். உயிருக்கு இயக்க மையங்கள் பல உள்ளன. அத்தகைய மையங்கள் உடம்பில் ஆறு இடங்களில் இருப்பதாக மெய்யுணர்வாளர்கள் உணர்ந்து உணர்த்தி உள்ளனர். அவைகளின் அடி மட்டத்தில் இருக்கும் மையம் மூலாதாரமாகும்.

ஒவ்வொரு மையத்திலும், உயிர்ச்சக்தியை இயக்கிவிட்டால் அதற்கேற்ற பலன் ஏற்படும். மேலும் கீழே இருந்து மேலே போகப் போக, பலன்மிகும். இவ்வாறு இயக்கிவிடப்படும் உயிர்ச்சக்தியால் உடலில் உள்ள செல்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்த இயலும். உயிர்ச் சக்தியானது உடலின் செல்களுக்கு ஒத்த முறையில் அமையவில்லையென்றால் உடல் நோய்கள், மன நோய்கள் போன்றவை ஏற்படும். எனவே, ஆற்றல் மிக்க உயிர்ச்சக்தியைச் சேர்க்கவும், பாதுகாக்கவும் அறிந்திருக்க வேண்டும். இதனைத்தான் ஆன்மீக அறிவு என்கின்றனர். இந்தத் தெளிவையும் பயிற்சியையும் நல்குவதே எளிய முறைக் குண்டலினி யோகம் என்பது. உயிர்ச் சக்தியை உணர்ந்து அதன் இயக்கத்தை நெறிப்படுத்துவதன் மூலம், அதன் படர்க்கை நிலையான மனதையும் சீரமைத்துக் கொள்ள இயலும்.

# FA கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி
# அல்வாய் நண்பர்கள் வி.கழகம் வெற்றி





FA Cup க்கான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் (26.11.2016) அன்று அல்வாய் நண்பர்கள் மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் மோதியது.


இப்போட்டியில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டு கழகம் 2:0 என்ற அடிப் படையில்வெற்றிபெற்றது. ஞ

# வல்வை அணி இரண்டாமிடம்



நெற்கொழு கழுகுகள் வி.கழகத்தால் நடத்தப்பட்ட மென்பந்தாட்ட சுற்றுத் தொடரில் 26.11.2016 அன்று இடம் பெற்ற போட்டியில் வல்வை அணி முதலாவது ஆட்டத்தில் கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணியையும் இரண்டாவது ஆட்டத்தில் தொண்டைமானாறு ஒற்றுமை அணியையும் வீழ்த்தி இறுதியாட்டத்தில் கொம்மாந்தறை அணியிடம் தோல்வி அடைந்தது வல்வை அணி. (கு)

# யுவராஜின் திருமணத்தில் பங்கேற்கப் போவதில்லை
## யுவராஜின் தந்தை அதிரடி



இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கின் திருமணத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அவரது தந்தை யோக்ராஜ் சிங் உறுதியாகக் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் யுவராஜ் சிங், மொடல் அழகியான ஹசல் கீச்சை திருமணம் செய்துகொள்ளவுள்ளார். அவர்களது திருமணம் வருகிற நவம்பர் 30ஆம் திகதி பஞ்சாபில் நடக்கிறது. இந்த திருமண விழாவில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடிக்கும் யுவராஜ் சிங் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில், நவம்பர் 30 ஆம் திகதி பஞ்சாபிலும், டிசெம்பர் 2ஆம் திகதி கோவா மற்றும் டில்லியிலும் நடக்கும் திருமண நிகழ்வுகளில் தான் பங்கேற்கப் போவதில்லை என்று யுவராஜ் சிங்கின் தந்தை யோக்ராஜ் சிங் கூறியுள்ளார்.

29ஆம் திகதி நடைபெறும் மெஹந்தி வைபவத்தில் தாம் பங்கேற்கப்போவதாகவும் அதற்கு யுவராஜ் தன்னை அழைத்துள்ளதாகவும் கூறியுள்ள அவர், கோவாவிலும் டில்லியிலும் நடக்கும் மத ரீதியிலான திருமண வைபவங்களில் தான் பங்கேற்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

எனக்கு இறை நம்பிக்கை இருக்கிறது. ஆனால், மத குருக்கள் மீது இல்லை. அவர்கள் நடத்தி வைக்கும் திருமணத்தில் நான் கலந்து கொள்ளமாட்டேன் என்று யோக்ராஜ் உறுதிபட கூறியிருக்கிறார்.

யுவராஜ் சிங்கின் தந்தையும் தாயும் விவாகரத்து பெற்றவர்கள். தாய்-தந்தை பிரிவுக்குப் பிறகு யுவராஜ் தாயுடன் இருக்கிறார். யுவராஜினதிருமணம்அவரதுதாயின் ஏற்பாட்டில் தான் நடக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிங்க் போல் டெஸ்ட்
# ஆஸி ஆறுதல் வெற்றி



அஸ்திரேலியா - தென் ஆபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3-வது போட்டி அடிலெய்டில் கடந்த 24ஆம் திகதி தொடங்கியது. பிங்க் பந்தில் பகல் - இரவு டெஸ்ட் போட்டியாக நடத்தப்பட்ட இதில் தென்னாபிரிக்கா அணி நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடத்தீர்மானித்தது.

அநத அணியின் தலைவர் டு பிளிசிஸ் ஆட்டமிழக்காமல் 118 ஓட்டங்கள் எடுக்க 9 விக்கெட் இழப்பிற்கு 259 ஓட்டங்கள் எடுத்து முதல் இன்னிங்சை டிக்ளேர் செய்தது தென்னாபிரிக்கா. பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா கவாஜாவின் (145) அபார சதத்தால் 383 ஓட்டங்கள் குவித்தது.

இதனால் தென்னாபிரிக்கா அணி முதல் இன்னிங்சில் 124 ஓட்டங்கள் பின் தங்கியது. 124 ஓட்டங்கள் பின்தங்கியதுடன் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா 3 ஆவது நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 194 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

4ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து ஆட்டத்தை தொடங்கிய டிகாக் 5 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க குக் நிலைத்து நின்று தனது அறிமுக போட்டியிலேயே சதம் அடித்தார். தென்னாபிரிக்கா அணி 2 ஆவது இன்னிங்சில் 250 ஓட்டங்கள் எடுத்து முதல் இன்னிங்ஸில் 124 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இருந்ததால் 2 ஆவது இன்னிங்சின் முடிவில் தென்னாபிரிக்க அணி 126 ஓட்டங்களே முன்னிலை பெற்றிருந்தது.

இதனால் அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு 127 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.


3 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 127 ஓட்டங்கள் எடுத்து அவுஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றி மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா ஆறுதல் வெற்றி பெற்றுள்ளது.



முதலமைச்சர் வெற்றிக்கிண்ணத்துக்கான 2016 ஆம் ஆண்டுக்கான 11 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் துணுக்காய் வலயத்தினை வீழ்த்தி சம்பியன் ஆன யாழ்ப்பாணம் கல்வி வலய அணியினரை படத்தில் காணலாம்.

# மகளின் மேல் டோனி இவ்வளவு பாசமா?



அண்மையில் நியூசிலாந்து அணியுடன் நடந்து முடிந்த ஒருநாள் தொடருக்கு பின் இந்திய ஒரு நாள் அணியின் தலைவரான டோனி தற்போது ஓய்வில் உள்ளார்.

மேலும் இந்திய அணியானது தற்போது இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இன்னும் இத்தொடர் முடிவடைய மூன்றுடெஸ்ட்போட்டிகள்உள்ளதால், ஒருநாள் அணியின் தலைவரான டோனிக்கு அதிக அளவு ஓய்வு கிடைத்துள்ளது.

ஓய்வு நேரத்தில் டோனி தன்னுடைய குடும்பத்தாருடன் மற்றும் சக நண்பர்களுடன் அதிக நேரம் செலவிடுவார். அதை மிகவும் மகிழ்ச்சியான நேரமாக மாற்றி விடுவார். அதிலும் அவருக்கு அவருடைய குழந்தையான ஜிவவை ரொம்பவே பிடிக்கும்.


அது போல தற்போது தன்னுடைய மனைவியான சாக்ஷியுடன் டோனி சென்னை செல்வதற்கு திட்டமிட்டுள்ளார். அதன்படியே இருவரும் விமானத்தில் பயணம் செய்வதற்காக அமர்ந்துள்ளனர்.

அப்போது விமானத்தின் பணியாளர் டோனியின் குழந்தைக்கு எவ்வாறு பெல்ட் அணிவது மற்றும் வேற எந்த முறைகள் எல்லாம் குழந்தை பாதுகாப்பிற்கு பின்பற்ற வேண்டும் என கூறியுள்ளார்.


இதை டோனி சற்று கூட கவனம் சிதறாமல் கேட்கும் வீடியோவை அவருடைய மனைவி சாக்ஷி தன்னுடைய இன்ஸ்டாகிராமில் பதிவேற்றம் செய்துள்ளார்.

# கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில்...





(படங்கள்:-உ.சாளின்)











காணப்பட்ட கல்லறைகள் மற்றும் நினைவுக்கற்கள் படையினரால் இடித்து ஒதுக்கப்பட்டு துயிலுமில்லங்கள் இருந்த இடம்தெரியாது மாற்றப்பட்டிருந்தன.

அதன் பின்னர் துயிலுமில்லங்களில் படையினர் முகாம்கள் அமைத்து சில வருடங்கள் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். தற்போது படையினர் அங்கிருந்து வெளியேறிய நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்திற்கு சென்ற மாவீரர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பற்றைகளால் சூழப்பட்டு காணப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களை துப்புரவு செய்தனர்.

நேற்று கார்த்திகை 27இல் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி உயிர் நீத்த உறவுகளுக்கு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி உணர்வுபூர்வமாக மாவீரர் நாள் நிகழ்வை அனுஷ்டித்தனர்.

மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பட்டு பொதுச் சுடரேற்றப்பட்டது. கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் பொதுச் சுடரை பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஏற்றி வைக்க தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்

கல்லறைகள், நினைவுக் கற்கள் இல்லாத போதும் எங்கள் பிள்ளைகள் புதைக்கப்பட்ட இந்த இடத்தில் நின்று அவர்களை நினைவு கூர கிடைத்த சந்தர்ப்பத்தை என்னால் எவ்வாறு கூறுவது என்று தெரியவில்லை. எனது பிள்ளையை அவனது புதைக்குழியில் நின்று நினைவு கூருவதற்கு இனி சந்தர்ப்பமே இல்லாது போய்விடுமோ என்று ஏங்கிய எனக்கு இப்பொழுது ஆத்ம திருப்தி ஏற்பட்டுள்ளது. ஏழு எட்டு வருடங்களுக்கு பின் இந்த இடத்தில் நின்று சுடரேற்றி அஞ்சலி செலுத்துவேன் என்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை. ஆனால் இன்று (நேற்று) அது நடந்திருக்கிறது. எனவே எனக்கு இப்போதுள்ள ஒரு ஆசை இந்த மாவீரர் துயிலுமில்லம் கடந்த காலத்தில் இருந்தது போன்று மீண்டும் மாறவேண்டும். அதுவும் ஒருநாள் நடக்கும் என்ற நம்பிக்கை உண்டு என்றார் மாவீரர் ஒருவரின் தாய்.

இவ்வாறு பலர் தங்களின் உணர்வுகளை கண்ணீராலும் வார்த்தைகளாலும் வெளிப்படுத்தியவாறு மாவீரர் நாள் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின் முதல்முதலாக துயிலுமில்லங்களில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் அரசியல் தரப்புகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-4,312)

## மட்டக்களப்பில் மாவீரர் நாள் நிகழ்வு

உரிமைப்போராட்டத்தில் உயிர் நீத்த உறவுகளின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை மட்டக்களப்பில் நடைபெற்றது. இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நல்லையா வீதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன்.செல்வராசா உட்பட கட்சி ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (இ-11)

# மாவீரர் நாள்; இராணுவ...

வடக்கில் நேற்றைய தினம் நடைபெற்ற மாவீரர் நாள் நினைவு நிகழ்வுகளில் இராணுவத்தினரின் அச்சுறுத்தல் சம்பவங்கள் பெரிதளவில் இடம்பெறாத போதிலும் கண்காணிப்பு நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெற்றன. நல்லூரில் நேற்றைய தினம் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், அனந்தி ஆகியோரது ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனது நினைவு தூபியில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றது.

இதன்போது நல்லூர் தெற்கு வாயில் கோபுரத்திற்கு அருகாமையில் இராணுவத்தினர் ட்ரக் வண்டியில் நினைவு நிகழ்வுகளை கண்காணித்துச் கொண்டிருந்தனர் பின்னர் நல்லூர் ஆலய முகப்பு பகுதியிலும் பவல் வாகனத்தில் இராணுவத்தினரது நடமாட்டங்கள காணப்பட்டன. திலீபனது நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்ற போதும் புலனாய்வுப் பிரிவினர் அனைத்து நிகழ்வுகளையும் காணொளியாக பதிவு செய்தனர்.

இதேபோன்று கிளிநொச்சியில் துயிலுமில்லங்களில் நடைபெற்ற மாவீரர் நிகழ்வுகளிலும் புலனாய்வு பிரிவின் அதிகரித்த பிரசன்னம் காணப்பட்டது. மன்னார் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஆங்காங்கே விசேட அதிரடி படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. வவுனியா நகரில் வழமைக்கு மாறாக பொலிஸ் கண்காணிப்பு நடவடிக்கைளும் இடம்பெற்றுள்ளன.

பொது இடங்களில் மற்றும் மாவீரர் துயிலுமில்லங்களில் நடைபெற்ற நினைவு நிகழ்வுகளில் பொதுமக்கள் துணிவுடன் ஆயிரக் கணக்கில் கலந்து கொண்டிருந்த போதிலும் ஆலயங்களில் மற்றும் வீடுகளில் நினைவு நிகழ்வுகளை தனித்து நடத்துவதற்கு பொது மக்கள் தொடர்ந்தும் அச்சநிலையில் உள்ள தனை அவதானிக்க முடிந்தது. இதேவேளை கனகபுரம் துயிலுமில்லத்தில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டதால் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது அங்கு போக்கு வரத்து பொலிஸார் வீதி ஒழுங்கு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். (இ-4)







தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கந்தர்மடத்தில் உள்ள அலுவலகத்திலும், மாட்டின் வீதியில் உள்ள தமிழரசு கட்சியின் அலுவலகத்திலும் மன்னார் ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலுமில்லத்தில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரனின் தலைமையில் மாவீரர் தின நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற்றன.

## புத்துயிர்பெற்ற...

தமிழ் மக்களின் விடுதலைக்காக களமாடி உயிர்துறந்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் தினம் நேற்றையதினம் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கிலும் புலம்பெயர் நாடுகளிலும் பெரும் எழுச்சியுடன் புலிகள் காலத்தில் ஒலித்த மாவீரர் பாடல்களுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

யுத்தத்தின் பின்னர் பெரும் எழுச்சி கொண்ட மாவீரர் தினமாக இந்த வருட மாவீரர் தினம் அமைந்துள்ளது. புலம்பெயர் நாடுகளில் முன்னைய வருடங்களில் எழுச்சிகரமாக மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தாலும் வடக்கு கிழக்கில் இம்முறையே மக்கள் எழுச்சியடைந்துள்ளனர்.

யாழ்.பல்கலைக் கழக சமூகத்தினரால் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட மாவீரர் தின நினைவுகூரல் வடக்கு கிழக்கு எங்கும் பெரும் எழுச்சியை தோற்றுவித்தது.

யுத்தத்தின் பின்னர் மாவீரர் துயிலுமில்லங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தன. இதன் காரணமாகவும் அப்போது காணப்பட்ட அரசியல் சூழ்நிலைகள் காரணமாய் துயிலுமில்லங்களில் வழிபாடுகள், அஞ்சலிகள் இடம்பெறவில்லை. எனினும் கிளிநொச்சியில் உள்ள உருத்திரபுரம், முழுங்காவில் துயிலுமில்லங்கள் மற்றும் வடமராட்சியிலுள்ள உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், பண்டி விரிச்சான் துயிலுமில்லங்கள் என்பன பொது மக்களினால் சிரமதானம் செய்யப் பட்டு நேற்று மாலை 6.05 மணியளவில் ஈகச்சுடர் ஏற்றியிருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்திலும், சாட்டி மாவீரர் துயிலுமில்லத்திலும், மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. கிளிநொச்சியில் கனகபுரம், முழுங்காவில், மாவீரர் துயிலுமில்லங்களிலும், மன்னாரில் பண்டிவிரிச்சான், ஆட்காட்டிவெளி, மாவீரர் துயிலுமில்லங்களிலும், முல்லைத்தீவில் முள்ளிவாய்க்கால், நந்திக்கடல் போன்ற இடங்களிலும் அலம்பில் மாவீரர் துயிலுமில்லத்திலும், வவுனியாவில் பொங்கு தமிழ நினைவு தூபி முன்பாகவும், குருமன் காட்டில் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் அலுவலகங்களில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளே வடக்கில் பிரதானமான நிகழ்வுகளாக அமைந்திருந்தன.

கிழக்கில் அம்பாறை, கிழக்கு பல்கலைக்கழகம், மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்திலும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அலுவலங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் பரவலாக நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தாயகத்தில் நடைபெற்ற மாவீரர் தின உருக்கமான நிகழ்வுகள். மாவீரர்களது பெற்றோர்கள், சகோதரர்கள் தமது உறவுகளை நினைத்து கண்ணீர் மல்க துயிலுமில்லங்களில் விளக்கேற்றினர். சில தாய்மார்கள் துயிலுமில்லங்களில் உடைக்கப்பட்ட, சிதைக்கப்பட்ட கல்லறைகளை கட்டியணைத் துக் கதறி அழுதது அனைவரது கண்களையும் கண்ணீர்க் குளமாக்கியது. (இ-4)

## வவுனியாவில்...

வேந்தல் நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் காணாமல் போனோரின் உறவுகளே இவ்வாறு கண்ணீர் மல்க அங்கு அமைக்கப்பட்டிருந்த மாவீரர் தூபிக்கு மலர்தூவி கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

மாலை 6.05 மணிக்கு மாகாண சபை உறுப்பினர் எம். தியாகராசா மற்றும் காணாமல்போனோரின் உறவுகளின் சங்கத்தலைவி ஆகியோர் தூபிக்கு மலர்மாலை அணிவித்திருந்ததுடன் வன்னி நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் பிரஜைகள் குழுவின் தலைவருமான ராஜ்குமார் ஆகியோர் பொதுச் சுடரை ஏற்றினர்.

இதனையடுத்து மாவீரர்களின் உறவுகள் மற்றும் காணாமல் போனோரின் உறவுகள் தீபம் ஏற்றி வணக்கம் செலுத்தினர். (இ-11)

## யாழ்.பல்கலை...

அதனை அண்டியுள்ள பகுதிகளில் சிவில் உடையில் புலனாய்வாளர்களின் நடமாட்டம் காணப்பட்டது. (இ-4)

## விபத்தில்...

பொதுப்பிட்டிய ரயில் கடவையை கார் ஒன்று கடக்க முற்பட்ட போதே காலியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் போது காரில் பயணித்த ஐவர் உயிரிழந்த நிலையில், சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-11)

## கோப்பாயி...

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ். கோப்பாயிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக நினைவுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் மாவீரர்களின் பெற்றோர்கள் நேற்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் சுடரேற்றியதுடன், மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)


கிளி/முருகானந்தா கல்லூரி

சேவை நலன் பாராட்டு விழா



அழைப்பிதழ்

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்
திரு.தில்லையம்பலம் வரதன்
(SLPS.II)[B.B.A (Hons), PGDE (Merit), M.Ed(Merit)]
அவர்கள்
எமது கல்லூரிச் சமூகத்திற்கு ஆற்றிய
உயரிய அர்ப்பணிப்பான
சேவைக்கான சேவைநலன் பாராட்டு விழா
கல்லூரி வளர்ச்சிக்காய் தன்னை அர்ப்பணித்த
கடமை வீரன் - இவர்
முன்னெடுக்கும் பணிகளில் பின்வாங்காதவர்
வெற்றிகள் பல காண வாழ்த்துகின்றோம்
நாம்...
காலம் :- 30.11.2016 (புதன்கிழமை)
நேரம் :- ந.ப 12.00 மணி
இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்

நிகழ்வு சிறக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்

(C-6486)

கல்விமாணி (B.Ed )
நுழைவுப் பரீட்சைக்கான
விசேட கருத்தரங்கு
திங்கள் (இன்று) தொடக்கம் வெள்ளிவரை
பி.ப. 5.00 - 7.30 மணிவரை
தொடர்பு
0766883394, 0212223382
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)
(C-6501)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

அனைத்து நாடுகளுக்குமான
விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6359)

வேலைக்கு ஆள் தேவை
கம்யூட்டர் ரைப்பிங் தெரிந்தோர் தேவை. மற்றும் உதவியாளும் தேவை நேரில் வரவும்.
Haris Printers 169, பலாலி வீதி, கந்தர் மடச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P :- 021 222 0231
(6729)

பிரத்தியேக வகுப்பு
தரம் 6 தொடக்கம் O/L வரை கணிதமும் தரம் 10, 11ற்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் பல வருடங்கள் அனுபவமிக்க ஆசிரியரால் உங்கள் வீடுகளுக்கு வந்து தனியாகவோ / குழுவாகவோ கற்பிக்கப்படும். O/L மாணவர்களுக்கு இறுதியில் 10 வருட கடந்த காலப் பரீட்சை வினாத்தாள் செய்யப்படும்.
தொடர்புகளுக்கு :-
0776452622
(6727)

சிறுநீரகம் தேவை
யாழ் நகரில் வசிக்கும்
ஒருவருக்கு A அல்லது O
இரத்த வகையிலுள்ள
சிறுநீரகம் தேவை.
0775026827
0775723236
(6704)

Evershine Education Centre
No. 123, Brown Road, Jaffna.
ICT வகுப்புக்கள்
Grade 10,11 & G.C.E (A/L)
- பல்லூடக நிகழ்த்துகை மூலமான கற்பித்தல்
- கற்றல் கையேடுகள், மாதிரி பரீட்சை வினாத் தாள்கள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சைகள் நடத்தப்படும்

அனுமதிக் கட்டணங்கள் எதுவுமில்லை.
- தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறும்.
- ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் முற்று முழுதாக ஆங்கிலத்தில் இடம்பெறும்.

ஆரம்பம் :- 05.12.2016 மாலை 6 மணி - தரம் 10
07.12.2016 மாலை 6 மணி - தரம் 11
ஆசிரியர் :-
S.Gowsigan (B.Tech - Network Tech.)
தொடர்புகளுக்கு :- 0773784053
Email :- gowsivembadi@gmail.com
Note :- க.பொ.த (உ/த) 2018 மாணவர்களுக்கான வகுப்புக்களும் விரைவில் ஆரம்பமாகின்றன.
(6717)

பாடசாலை மாணவர்களுக்கான
ஓர் நற்செய்தி!
TCT MULTI TRADE CENTRE
உங்கள் TCT Multi Trade Centre இல்



பாடசாலை சீருடை விநியோகம் ஆரம்பம்! (School Uniform)
அனைத்து விதமான பாடசாலை சீருடைகளையும் (China மற்றும் Japan Material) தரமானதும் நியாயமான துமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Shirt material
Shorts material
Trouser material
TCT MULTI TRADE CENTRE
527, நாவலர் வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்.
021 222 8025
"அறப்பணியே எமது முதற் பணி"
(C-6500)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.